விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 தாளம் 92 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 09 வியாழக்கிழமை (25.10.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்

அணி திரள்வோம்

# பிரிட்டனிலிருந்து 28 இலங்கையர் நேற்று நாடு கடத்தப்பட்டனர்


(ஆர். சிவரூபன்)

பிரிட்டனிலிருந்து நேற்று நாடு கடத்தப்படவிருந்த அறுபது இலங்கையர்களில் 28 பேர் மட்டுமே நேற்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். அகதி அந்தஸ்து நிரா- கரிக்கப்பட்ட மற்றும் விசாக் காலம் முடிவடைந்த பின்னரும் பிரிட்டனில் தங்கியிருந்த அறுபது இலங்கையர்களை நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பிரித்தானியக் குடிவரவுத் திணைக்களம் மேற்கொண்டிருந்தது. தாம் இலங்கைக்கு அனுப்பட்டால் தமக்குத் துன்புறுத்தல், உயிர் அச்சுறுத்தல் ஏற்படுமென்று இலங்கை அகதிகள் சிலர் பிரிட்டன் நீதிமன்றத்தில் தடையுத்தரவு கோரி வழக்குத் தாக்கல் செய்தனர். இதனால் நீதிமன்ற உத்தரவுகளின்படி நாடு கடத்தப்படவிருந்தவர்களில் 38 பேர் பிரிட்டனில் தற்காலிகமாக இருக்க அனுமதிக்கப்பட்டனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தை நேற்று வந்தடைந்த 28 இலங்கையர்களில் 14 பேர் தமிழர்கள், 9 பேர் சிங்களவர்கள், 5 பேர் முஸ்லிம்களாவர். இவர்கள் விமான நிலையத்தில் புலனாய்வுப் பொலிசாரின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்று இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்த அறுபது இலங்கையர்களையும் விசேட விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்க இரண்டரை இலட்சம் யூரோக்கள் செலவாகுமென லண்டனிலிருந்து வெளிவரும் 'த இன்டிப்பென்டன்ற்' என்ற பத்திரிகை தெரிவித்திருந்தது.

பிரித்தானியாவிலிருந்து 02



அரசாங்கம் திரட்டும் சிவில் பாதுகாப்புப் படையில் முன்னாள் புலி இயக்கப் போராளிகள் 350 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரை படத்தில் காணலாம்.

## ஹம்பாந்தோட்டை விடுதியில் 16 தமிழ் இளைஞர்கள் கைது

(ஹம்பாந்தோட்டை)

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 16 தமிழ் இளைஞர்களை ஹம்பாந்தோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியா செல்லும் நோக்கத்தில் ஹம்பாந்தோட்டை, மயுரபுர பகுதியிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த நிலையிலேயே இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களென்று விசாரணைகள் மூலம் 02

## இலஞ்சம் பெற்ற யாழ்.பொலிஸ் சார்ஜன்ட் பதவி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

விபத்துக்குக் காரணமான சாரதி ஒருவரிடம் இருந்து 10,000 ரூபா லஞ்சம் வாங்கிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்ட சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது. யாழ்.பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து 02

## 13ஆவது திருத்தச் சட்ட சர்வஜன வாக்கெடுப்பு வடக்கு, கிழக்கில் மட்டுமே நடைபெற வேண்டுமென்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

அரசாங்கம் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக் கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வது தொடர்பில் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தினால் அதனை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக எதிர்க்கும். 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் 02

## இலங்கையிலும் நிலநடுக்கம் ஏற்படலாம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கையிலும் நிலநடுக்கம் ஏற்படலாம் என நிலநடுக்கத் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கக் கூடிய கட்டடங்களை வடிவமைப்பதற்கான வழிகாட்டு உபகுழுவின் தலைவர் சகாபந்து தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கத்தின் பாதிப்புகளில் இருந்து இலங்கை இனிமேலும் நீண்ட காலத்துக்குத் தப்பிக் கொள்ள முடியாது.

இலங்கையின் தென்மேற்கு கரைக்கு அப்பால் 500 - 700 கி.மீ தொலைவில், இந்தோ - அவுஸ்ரேலிய புவித்தட்டில் பிளவு ஏற்பட்டுள்ளதாக அண்மைய புவியியல் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், புதிய புதிய தட்டு ஒன்று உருவாகி வருகிறது. இதன் காரணமாக, 02

## சா/த பரீட்சை டிசெ.11ஆம் திகதி ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைகள் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த பரீட்சைகள் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது திருத்தத்தை நீக்கக் கோருவது சர்வதேசச் சதி என்கிறார் அமைச்சர் திஸ்ஸ

(கொழும்பு)

"பதின்மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை நீக்குமாறு சில அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் கோருவது, ஜெனீவாவில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கைக்கு பிரச்சினை கொடுப்பதற்கான ஒரு சர்வதேசச் சதி". இவ்வாறு லங்கா சமஜமாஜக் கட்சித் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

"பதின்மூன்றாவது அரசியல் அமைப்புக்கு எதிராக இயக்கம் நடாத்துவோர்கள் இலங்கையைச் சீர்குலைக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கும் எமது எதிரிகளுக்கு ஆயுதங்களை வழங்குகிறார்கள்" என்றும் அவர் சொன்னார். "பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குமாறு கோரும் கருத்துக்கள் 02

## சிவில் பாதுகாப்புப் படையில் 3000 தமிழ் இளைஞர், யுவதிகள்: 350 பேர் முன்னாள் புலிகள்

(கிளிநொச்சி)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலிப் போராளிகளில் 350பேர் சிவில் பாதுகாப்பு படையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகளில் 350பேரே இவ்வாறு படையில் இணைக்கப்பட்டதாக சிவில் பாதுகாப்புப் படை தெரிவித்தது.

இனிவரும் நாட்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகளையும் சிவில் பாதுகாப்பு படையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அப்படையின் வட பிராந்தியப் பொறுப்பதிகாரி மேஜர் அனில் பண்டார தெரிவித்தார்.

இந்நிலையில், மேற்படி போராளிகள் உள்ளடங்களாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த சுமார் 02

# தெரிவுக்குழுவில் தமிழ் கூட்டமைப்பை பங்குபற்றச் செய்துவிட்டு 13ஐ நீக்க அரசு திட்டம்

**எம்.பி. சுமந்திரன் எம்.பி.**

தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண நாடாளுமன்ற தெரிவுக்குழுவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கலந்து கொள்ள வைத்து விட்டு, 13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய அரசாங்கம் முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என முன்வைக்கப்படும் யோசனைகள் மூலம் இது தெரிய வந்துள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.ஏ. சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்ய வேண்டும் என்பதை இந்தியாவும், சர்வதேச சமூகமும் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் கருத்தை அரசாங்கத்தின் கருத்தாக கருத முடியும். 13வது அரசியல் அமைப்புத்திருதத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்தானது ஒட்டு மொத்த அரசாங்கத்தின் நிலைப் பாடாகவே எம்மால் கருத முடியும்.

இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்திடம் 13வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்ற தீர்வை வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது. எனினும் சகல வாக்குறுதிகளையும் மீறி அரசாங்கம் அனைவரையும் ஏமாற்றி வருகிறது. இது குறித்து எமது இந்திய விஜயத்தின் போது, இந்திய தலைவர்களுக்கு தெளிவுப்படுத்தியிருந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுக்கு சென்று திரும்பிய மறுதினமே பாதுகாப்பு செயலாளர் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார். இதன் மூலம் நாங்கள் தெரிவித்தது உண்மை என்பதை அவர் ஒப்புவித்துள்ளார். இந்த அனைத்து நடவடிக்கைகளும், தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான வழங்க விரும்பவில்லை என்பதையே காட்டுகிறது எனவும் சுமந்திரன் கூறியுள்ளார்.

# யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட தேசியப் பாடசாலையின் 150ஆவது ஆண்டு விழா இன்று

யாழ் திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையின் நூற்றைம்பதாவது ஆண்டு விழா இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலையில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

அதிபர் தலைமையில் நடைபெறும் இவ் நிகழ்விற்கு அமல மரித்தியாகிகள் சபை முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். அதேவேளை, கௌரவ விருந்தினராக திருக்குடும்ப கன்னியர்சபை வடமாகாண முதல்வர் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. வி. செல்வராஜா யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. குணநாதன் மற்றும் பழைய மாணவர் சங்கத் தலைவிகளான, செல்வி வயலற் இம்மனுவேல், திருமதி நவமலர் கனகசுந்தரி, திருமதி மல்லிகா பாலதாசன், திருமதி கெலனா றொட்றிக்கோ ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இப்பாடசாலையானது 1845ம் ஆண்டளவில் அப்போதைய யாழ் ஆயர் ஓறாசியோ பெற்றாக்கினி அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1862இல் இலங்கைக்கு முதன்முதலாக வருகைதந்த கத்தோலிக்க பெண் துறவிகள் சபையான திருக்குடும்ப கன்னியர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு இன்றுடன் 150 ஆண்டுகளாக நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. 1976ம் ஆண்டு தனியார் பாடசாலையாக இயங்கிய இது பின்னர் அரசிடம் ஒப்படைக்கப்பட்டு அரச பாடசாலையாக இயங்கினாலும் திருக்குடும்ப கன்னியர் மட பாரம்பரியத்துடன் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிகழ்வில் "familian flame" என்ற முப்பொன் விழா சஞ்சிகை வெளியிடப்படுவதுடன் மூத்த அதிபர், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள் பலரும் கௌரவிக்கப்பட உள்ளதுடன் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் தொழிலாளர்களைத் துன்புறுத்தும் நாடுகளில் இலங்கையும் ஒன்று

பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் பாலியல் தொழிலாளர்கள் தொந்தரவு செய்யப்படும் நாடுகளுள் இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் அடங்குவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கூட்டம், ஐ.நா சனத்தொகை நிதியம் ஆகியவை வேறு சில நிறுவனங்களுடன் இணைந்து தயாரித்துள்ள 210 பக்கங்களை கொண்ட அறிக்கையில் பங்களாதேஷ், கம்போடியா, சீனா, இந்தியா, கிரிபெட்டி, மியன்மார், நேபாளம், பப்புவா நியூகினி தீவுகள் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் பாலியல் தொழிலாளர்கள் பொலிஸ் மற்றும் இராணுவத்தால் துன்புறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநேகமாக ஆசிய நாடுகளில் விபசாரத்தை சட்டமாக்குதல் தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிவகைகள், பாலியல் தொழிலாளர்களை தலைமறைவாக தொழில் செய்ய வைப்பதால் எய்ட்ஸ் மற்றும் வேறு பால்வினை நோய்கள் தொற்றும் அபாயத்துக்குள் அவர்களை தள்ளிவிடுகின்றது என்று இந்த அறிக்கை கூறுகிறது.

ஆணுறைகளை கைப்பற்றி பொலிஸார் அதனை ஆதாரங்களாக பயன்படுத்துவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இலங்கையில் அநேகமாக பாலியல் தொழிலாளர்கள் வீதிகள், சேரி வீடுகளை மையமாகக் கொண்டு தொழில் செய்கின்றனர்.

இதைவிடக் களவாக இயங்கும் விபசார விடுதிகளும் உள்ளன. பல பாலியல் தொழிலாளர்கள் நடன கிளப்புகளில் வேலை செய்து கொண்டு விபசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

பாலியல் தொழிலாளர்களை புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைத்தல் என்னும் மிக மோசமான அணுகுமுறை சீனா, இந்தியா, இலங்கை, மியன்மார் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.

# கருக்கலைப்பு சட்டரீதியாகும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது

இலங்கையில் தற்போது அதிக அளவில் சட்டத்துக்கு முரணாக இடம்பெறும் கருக்கலைப்பு நடவடிக்கைகளை, சட்ட ரீதியான தாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான சட்ட மூலம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலி யத்த தெரிவித்துள்ளார். குறிப் பிடப்பட்ட சில நிலைமைகளின் போது கருக்கலைப்பு சட்ட ரீதியாக்கப்படும்.

## 13ஆவது திருத்தத்தை நீக்க..(தொடர்)

மிகவும் தூரதிர்ஷ்டவசமானவை. இது பாரிய அளவிற்கு எதிர் மறையான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவ" என்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் கமிட்டிக்கு தலைமை வகித்த திஸ்ஸ விதாரண, அதிகாரப் பகிர்வு குறித்து ஒரு தொகுதி சிபாரிசுகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்தவராவார்.

பதின்மூன்றாவது திருத்தம் புலிகள் தவிர்ந்த சகல ஆயுதக் குழுக்களும் ஆயுதங்களை கையளித்துவிட்டு ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் ஜனநாயக வழிக்குத் திரும்ப வழி வகுத்த ஒன்றாகும். சில அரசாங்க உறுப்பினர்கள் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கக் கோருவது குறித்து நான் மனம் வருந்துகிறேன்.

எந்தவொரு சூழ்நிலையின் கீழும் பதின்மூன்றாவது திருத்தம் நீக்கப்பட்டு மாகாண சபைகள் கலைக்கப்பட்டால், அது தமிழர் கள் மட்டுமல்ல இந்த நாட்டிலுள்ள சகல தமிழ் பேசும் மக்களும் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஒரு தேசம் என்ற வகையில் சிங்கள மக்களுடன் இணைந்து வாழக் கூடிய சகல நம்பிக்கைகளையும் தகர்த்து விடும். இது மிக மோசமான பேழிவுகளை ஏற்படுத்தக் கூடியது என்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண சொன்னார்.

பதின்மூன்றாவது திருத்தத்தில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால் அவற்றை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை ஈடு செய்யக் கூடியதாக ஒரு கூட்டு முயற்சியின் ஊடாக திருத்தப்பட வேண்டும்.

இலங்கை மண்ணில் பிரிவினைவாதத்தின் விதைகள் தூவப்படாதவாறு கிராம மட்டத்திற்கு அதிகாரங்கள் பகிர்வதன் மூலம் பதின்மூன்றாவது திருத்தம் மேலும் பலப்படுத்தப்படவேண்டும் என்பது லங்கா சமசமாஜக் கட்சியின் நிலைப்பாடாகும் என்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, "தமது நிலைப்பாடு முன்னர் போலவே இப்போதும் இருக்கிறது" என்று கூறினார். பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அப்பாலும் சென்று அதிகாரங்கள் மேலும் பகிரப்பட்டு மாகாண சபைகள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் சொன்னார்.

## இலங்கையிலும்..(தொடர்)

எதிர்காலத்தில் நிலநடுக்கத்தினால் இலங்கையில் அதிகளவு பாதிப்புகள் ஏற்படக்கூடும். என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்..

ஆவணப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், இலங்கையில் 1615ம் ஆண்டு பாரிய நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இதில், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அண்மைக்காலத்தில் எமது பிராந்தியத்தியத்திலும் பல நில அதிர்வுகளை உணர்ந்துள்ளோம். ஆனால் பாரிய பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.ஆனால் எதிர்காலத்தில் கொழும்பு போன்ற நகர மையத்தின் அருகே நிலநடுக்கம் நிகழுமானால், தற்போதைய அபிவிருத்தி மற்றும் சனத்தொகையின் காரணமாக பாரிய அழிவுகள் ஏற்படும்." என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

## 13ஆவது திருத்தச்..(தொடர்)

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அது வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

நாடு முழுவதிலும் வெகுசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் பெரும்பான்மை சிங்கள மக்கள் அதனை எதிர்க்கக் கூடும். எனவே நாடு முழுவதிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது என ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

## ஹம்பாந்தோட்டை...(தொடர்)

தெரியவந்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

## சிவில் பாதுகாப்புப்..(தொடர்)

மூவாயிரம் இளைஞர், யுவதிகள் சிவில் பாதுகாப்புப் படையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் 2200 பெண்களும் 800 ஆண்களும் அடங்குகின்றனர். இவர்களை உள்ளடக்கிய விவசாய வேலைத்திட்டமொன்று இன்று புதன்கிழமை, கிளிநொச்சி, அம்பால்நகர் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த விவசாயத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேஜர் அனில் பண்டார மேலும் கூறினார்.

## இலஞ்சம் பெற்ற...(தொடர்)

பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுனில் என்பவரே இவ்வாறு பதவீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

விபத்தொன்றுக்குக் காரணமான சாரதி ஒருவரிடமிருந்து 10 ஆயிரம் ரூபா பணத்தினை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு அவரை குற்றத்திலிருந்து விடுவித்துள்ளார் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்ததை அடுத்தே மேற்படி பொலிஸ் உத்தியோகஸ்தர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

## பிரிட்டனிலிருந்து 28 இலங்கையர்...(தொடர்)

விசேட வானூர்தி மூலம் இலங்கைக்கு நாடுகடத்தப்படவிருந்த அகதிகளுள் 10 தொடக்கம் 12 பேர் வரையில் விமானத்தில் இருந்து தரையிறக்கப்பட்டதாக லண்டனில் வெளியாகும் த கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. 48 புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கையை வந்தடைந்தனர்.

அவர்கள் இறுதி நேரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த தடையுத்தரவு கோரல் மனுவின் அடிப்படையில், நீதிமன்றம் அவர்களை நாடு கடத்த வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளது.

அவர்களின் வழக்குகளில் வாதாடிய சட்டத்தரணிகள் இந்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதற்கு எதிராக சுமார் 12 சட்ட அமைப்புகள் மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தன.

இந்த மனு மீதான விசாரணையை அடுத்து, தமது கட்சிக்காரர்கள் பலரை நாடுகடத்த தடையுத்தரவு பெற்றுள்ளதாக குறைந்தது மூன்று சட்ட அமைப்புகள் உறுதி செய்துள்ளன.

இலங்கைக்கு இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால், கைது, சித்திரவதை, உயிர் அச்சுறுத்தல் ஆபத்து இருப்பதாக சட்டவாளர்கள் வாதிட்டிருந்தனர்.

தமது கட்சிக்காரர்கள் மூவர் நாடு கடத்தப்படுவதில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளதாக டங்கன் லூவிஸ் சட்டவாளர்கள் அமைப்புத் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, இலங்கைக்கு அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிராக, ஹீத்ரோ விமான நிலையத்துக்கு அருகேயுள்ள குடிவரவுத் தடுப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்த 48 புகலிடக் கோரிக்கையாளர்கள் பிரிட்டனிலிருந்து சற்று முன் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்று ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தியொன்று தெரிவித்திருந்தது.

# அவுஸ்ரேலியா நோக்கிய கடல்வழி பயணம் தொடர்கின்ற போதும் செல்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி

இலங்கையில் இருந்து அகதிகளாக அவுஸ்திரேலியா செல்வோரின் படகுகள் அதிகரித்துள்ள போதும், அந்த படகுகளில் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் குடிவரவுத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது. கடந்த ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் இது வரையில் 6 இலங்கை அகதிப் படகுகள் அவுஸ்திரேலியாவை சென்றடைந்துள்ளன.

எனினும் அந்த படகுகளில் 12 பேருக்கும் குறைவான அகதிகளே பயணித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல விருந்த 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முனைந்த இந்த 16 பேரும் அம்பாந்தோட்டையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படகு பயணத்தை ஆரம்பிக்க திட்டமிட்ட நிலையில், விடுதி ஒன்றில் தங்கியிருந்த நிலையில், பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# ஒழுக்காற்று விசாரணைகளை துரிதப்படுத்த ஹக்கீம் வலியுறுத்தல்



கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது, கட்சியின் உத்தரவை மீறி அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏழு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதப்படுத்த கோரப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்காவில் உள்ள கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த விடயத்தை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இந்தச் சட்ட மூலத்துக்கு வாக்களிப்பதற்கு கால அவகாசம் கோருமாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரி இருந்தது.

எனினும் இதனை மீறி, அவர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லெபனானிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசேட செயற்றிட்டம்

லெபனானில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

லெபனானில் அவசர நிலைமை ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சும், லெபனானுக்கான இலங்கைத் தூதரகமும் அறிவித்துள்ளது.

லெபனானில் சுமார் 80000 இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அண்மைய நாட்களாக லெபனானின் பல பகுதிகளில் கலவரங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பற்ற இடங்களுக்கு செல்ல வேண்டாம் என இலங்கையர்களுக்கு தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

லெபனானின் நிலைமை குறித்து 24 மணித்தியால கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர நிலைமைகளின் போது இலங்கையர்களை மீள அழைப்பதற்கும், பாதுகாப்பு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை புனரமைப்புக்கு ஜப்பான் நிதியுதவி

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக ஜப்பானின் அபிவிருத்தி ஸ்தாபனம் 500 மில்லியன் ரூபாய்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்த அபிவிருத்திபணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும், எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு இந்தப் பணிகள் நிறைவடையும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் சுகாதார சேவைகளின் அபிவிருத்திக்காக, ஜப்பானின் அபிவிருத்தி ஸ்தாபனம் 4000 கோடி ரூபாய்களை வழங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி வைத்தியசாலை புனரமைப்புச் செய்யப்படுவதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பிரதேச மக்கள் தமது வைத்தியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பெரும் உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜே.வி.பி. குற்றச்சாட்டு

ஊழல் மோசடிகளினால் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூட நேரிட்டுள்ளதாக ஜே.வி.பி கட்சி தெரிவித்துள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதியை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி அரசியல்வாதிகள் தரகுப் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக ஜே.வி.பிபிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூட நேரிடும் என சில காலங்களுக்கு முன்னதாகவே எச்சரிக்கை விடுத்திருந்தேன்.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையேனும் பராமரிக்க வேண்டும்.

பல ஆண்டுகளாக செயற்பட்டு வந்த சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதனால் கோடிக் கணக்கான ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையப்பணிகள் ஸ்தம்பிதம் அடைவதனால் நாளொன்றுக்கு ஐந்தரை கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகக் குறைபாடுகளே இதற்கான காரணம் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

# யுவதி தற்கொலை: மதவாச்சியில் சம்பவம்

மதவாச்சி பிரதேசத்தில் யுவதியொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளாதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 22 வயதான யுவதி ஒருவரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

காதல் தொடர்பில் ஏற்பட்ட மன உலைச்சலினால் குறித்த யுவதி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் அனுராதபுர வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# தாய்லாந்திலிருந்து நகை, இரத்தினக்கல் கடத்தல்!

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சிக்கினார்

பாங்கொங்கில் இருந்து இலங்கைக்கு ஆபரணங்கள் மற்றும் இரத்தினக்கல் என்பவற்றை கடத்திவந்த நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று அதிகாலை 2 மணியளவில் கைது செய்யப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரை சோதனை செய்தபோது அவரிடம் இருந்து மொத்தம் 5500 கிராம் நிறையுடைய ஆபரணங்கள் மற்றும் இரத்தினக்கற்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் அனுமதியின்றி இப்பொருட்களை இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை அண்மைக் காலமாக வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கும், இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கும் தங்கம் உட்பட பல்வேறுபட்ட பெறுமதி வாய்ந்த பொருட்களை கடத்துவோரின் கைவரிசைகள் தொடாந்து வருகின்றன. இந்நிலையில் பல கடத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டும் உள்ளன.

# நிதிமோசடி: ஒருவர் கைது

வத்துகாமம் பொலிஸ் பிரிவிலுள்ள உடுராவன என்ற இடத்தில் நிதி நிறுவனம் ஒன்றை நடத்துவதாகக் கூறி சட்டவிரோதமான · முறையில் நிதி திரட்டி மோசடி செய்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக 28 பெண்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தமையடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின்போது குறித்த நபர் நான்கு இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக வத்துகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இவ்வாறான போலி நிறுவன உரிமையாளர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உகண்டாவுக்கு விஜயம் செய்துள்ளார்


ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உகண்டாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

உகண்டா நாட்டு அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் சவேந்திர சில்வா இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அந்நாட்டு இராணுவத்தினருடன் இலங்கை யுத்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நோக்கில் சவேந்திர இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

யுத்த கள அனுபவங்களை உகண்டா நாட்டு இராணுவத்தினருடன் சவேந்திர சில்வா பகிர்ந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உகண்டா நாட்டு உயர் இராணுவ அதிகாரிகளுடன் சவேந்திர சில்வா பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



உகண்டாவில் மிக நீண்ட காலமாக இன முரண்பாடுகள் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உகண்டாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த விஜயம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இன்றைய இராசி பலன் (25.10.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 9ஆம் நாள் வியாழக்கிழமை**

நட்சத்திரம் : சதயம் இரவு 9.59 வரை அதன் பின் பூரட்டாதி
திதி : ஏகாதசி இரவு 10.37 வரை. அதன் பின் துவாதசி
சுபநேரம் : 7.33 - 9.03
இராகுகாலம் : 1.33 - 3.03
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தொழில் முன்னேற்றம், பொருட்சேர்க்கை, மனமகிழ்ச்சி
**இடபம்** : பொருட்சேதம், பூமி இலாபம், தந்தை வழி உதவி
**மிதுனம்** : காரிய தாமதம், மன அமைதி, புத்திர சுகம்
**கடகம்** : மனக்குழப்பம், வீண் மனஸ்தாபம், ரோக பயம்
**சிங்கம்** : நண்பர் உதவி, விருந்துபசாரம், திருமண முயற்சி
**கன்னி** : கடன்தொல்லை, உடல்நலக்குறைவு, வாக்கு கலகம்
**துலாம்** : யாத்திரை, பொருள் வரவு, பெரியோர் உதவி
**விருச்சிகம்** : இல்லக் குழப்பம், வாகன சுகம், தாய்வழி நன்மை
**தனுசு** : காரியத் தடை, சகோதர சஞ்சலம், சிறுதூரப் பிரயாணம்
**மகரம்** : பணப்புழக்கம், வாக்கு சாதுரியம், போசன சுகம்
**கும்பம்** : அதிக செலவு, அலைச்சல், மனக்குழப்பம்
**மீனம்** : பொருள் இழப்பு, போசன சுகக் குறைவு, பிரயாணக் கஷ்டம்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# பசில் ராஜபக்சவின் குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்கிறார் இரா. சம்பந்தன்!



இலங்கை பொருளாதார அமைச்சரும் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது சுமத்திய குற்றச்சாட்டு தவறானது, பொறுப்பற்றது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு கொழும்பில் சில தமிழ் ஊடகவியலாளர்களிடையே பேசிய பசில் ராஜபக்ச, இலங்கைக்கு பொருளாதார உதவி வழங்கக்கூடாது என்று இந்தியா மற்றும் சீனாவிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரியதாக குற்றம் சாட்டியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளிக்கையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன், மேற்கண்டவாறு அவரது குற்றச்சாட்டை நிராகரித்தார்.

அத்துடன், தாங்கள் இந்திய மற்றும் சீன ராஜிய அலுவலர்களை சந்தித்தபோது, இலங்கைக்குப் பொருளாதார உதவிகள் வழங்க வேண்டாம் என்று கோரவில்லை என்றும், தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் குறித்தே பேசினோம் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

பசில் ராஜபக்ச தனித்து வடமாகாணத்தை அபிவிருத்தி செய்ய முடியாது! அவ்வாறு அவர் தான் மட்டும் வட மாகாணத்தை அபிவிருத்தி செய்யப்போவதாக கூறுவது அகங்காரமானது.

13வது திருத் தச் சட்டம் மகிந்த ராஜபக்ச கூறியதன் பிரகாரம் முழுமையாக அமுல்படுத்தி அதாவது அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்ட பின்னர், வடமாகாண தேர்தல் முடிந்த பின் அச்சபையின் பிரதிநிதிகள் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட முடியும்.

பசிலின் அண்ணனான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறார். எங்களிடம் மாத்திரமல்ல பல நாட்டுத் தலைவர்களிடமும், தூதுவர்களிடமும் கூறியிருக்கின்றார்.

அந்த நிலையில் பசில் ராஜபக்ச 13 வது திருத்தச்சட்டம் பற்றி கூறுவது அவரது தனிப்பட்ட கருத்தாகவே கொள்ள முடியும். 13வது அரசியல் சட்டத்திருத்தம் ரத்து செய்யப்படவேண்டுமா என்பது குறித்து கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கூறப்படுவது பற்றி குறிப்பிட்ட சம்பந்தன், இது குறித்து அரசு உறுதியான முடிவெடுக்கும் நிலையில் தனது கருத்தைத் தெரிவிப்பதாகக் கூறினார்.

இலங்கையின் வட மாகாணத்தில் சமுர்த்தி திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கும், திவிநெகும சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் 13வது அரசியல் சட்டத் திருத்தம் தடையாக இருக்கும் என்று கருதப்பட்டால், அதை இரத்து செய்ய இலங்கை அரசு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஆராயும் என்று பசில் ராஜபக்ஷ கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் கேசன்கேணியில் இராணுவ முகாம் மக்களுக்கு மாற்று இடங்கள் தரப்படும்

## - அரசு வாக்குறுதி

இலங்கையின் ஒலுவில் கேசன் கேணி கிராமத்தில் இராணுவ முகாம் அமைக்கப்படவிருப்பதால் அவ்விடத்தில் வாழும் மக்களுக்கு மாற்று இடம் வழங்கப்படுமென சட்ட மா அதிபர் உச்சநீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம் அமைக்கப்படுவதை முன்னிட்டு தமது காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதை எதிர்த்து அப்பகுதி மக்கள் சிலர் தொடுத்த வழக்கு விசாரணைக்குள்ள நிலையில், சட்ட மா அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பரில் இராணுவத்தினர் கேசன்கேணி பகுதியில் முகாம் அமைக்கப் போவதாகக் கூறி, அங்கு வாழும் மக்கள் தமது காணிகளை விலகிச் செல்ல வேண்டும் என்று அறிவித்ததாக மனுதாரர்கள் தெரிவித்திருந்தனர். இராணுவத்தின் அறிவிப்பையடுத்து இப்பகுதி மக்கள் சிலர் சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறவும் நேர்ந்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத்தின் நடவடிக்கைகளால் இப்பகுதியில் சுமார் ஐம்பது குடும்பங்கள் வீடுவாசலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

கேசன்கேணி கிராமத்திலிருந்து சுவீகரிக்கப்படும் காணிக்கு பதிலாக மாற்று இடங்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தரப்பு சட்டவாதி நீதிமன்றத்தில் கூறினார்.

கேசன்கேணி மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள் ஆதலால், வழங்கப்படக்கூடிய மாற்று இடம் விவசாயத்துக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கு கால அவகாசம் வழங்கும் பொருட்டு இந்த மனு மீதான விசாரணை டிசம்பருக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்கான திகதியை நேற்றுமுன்தினம் தீர்மானிப்பதற்கு கூட்டமைப்பு கலந்தாலோசித்திருந்த நிலையில், நேற்று கூட்டம் எதுவும் நடைபெறவில்லை என்று அக்கட்சி தெரிவித்தது.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகள், தமிழ் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அண்மையில் கடிதம் அனுப்பியிருந்தன.

இதனை தொடர்ந்து, இது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

அதற்கான திகதி நேற்று முன்தினம் தீர்மானிக்கப்படவிருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணத்தினால் கூட்டம் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அக்கட்சி அறிவித்தது.

# புலிகள் மறைத்து வைத்த வெடிபொருட்கள் மீட்பு

புலிகளினால் தயாரிக்கப்பட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்தது என நம்பப்படும் ஒரு தொகை வெடி பொருட்கள் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிக்குளம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப் புப் பிரிவினரால் இந்த ஆயுதங் கள் மீட்கப்பட்டுள்ளன.

பட்டாசு மருந்துகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட 42 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் அவுஸ்திரேலிய தயாரிப்பு தொழில்நுட்ப கருவி, இந்திய தயாரிப்பு கைக்குண்டுகள் ஆறு, 3 கிளைமோர் 100கிராம் வெடி பொருட்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையின் தோல்விக்கு ரணில் விக்ரமசிங்கவே காரணம்

## - ஸ்ரீரங்கா குற்றச்சாட்டு



நடந்து முடிந்த இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கை அணி தோல்வியடைவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம். வெற்றி பெறும் தறுவாயில் இருந்த போட்டியை அவர் பார்வையிடச் சென்றமையினாலேயே போட்டி தோல்வியடைந்தது என்று ஸ்ரீரங்கா எம்.பி. நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

ஆட்ட நிர்ணய சதி குறித்து விசாரணை நடத்துவதை விடுத்து 29 தடவை தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தமை குறித்தே ரணில் விக்கிரமசிங்க மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை கிரிக்கெட் அணி நான்கு தடவைகள் மாத்திரமே கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியோ நடைபெற்ற 29 தேர்தல்களில் தோல்வியை தழுவிக் கொண்டுள்ளது. இந்நிலையில் அது குறித்து பேசாது கிரிக்கெட்டில் ஆட்ட நிர்ணயம் குறித்து சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி இந்த சபைக்கு கொண்டு வந்திருப்பதானது வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என்றார்.

# ஆட்ட நிர்ணய சதியை தடுக்கும் சட்டம் விரைவில்

கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதியை தடுப்பதற்காக ஊழல் மோசடிகளை தடுக்கும் சட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளதாக விளையாட் டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆட்ட நிர்ணயத்தில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகளை கண்டறியும் வகையில் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.



வலிவடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வயாவிளான் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளிற்கு தீர்வுகாணும் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கலந்துரையாடல் ஒன்றை கடந்த சனிக்கிழமை நடத்தியிருந்தார். இதன்போது வயாவிளான் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான வீட்டுத்திட்டம், மலசலகூடம், மின்சாரம், குடிநீர், வீதிப் புனரமைப்பு, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார். கலந்துரையாடலின் பின்னர் அப் பகுதியை நேரில் சென்று உதயன் எம்.பி. பார்வையிடுவதைக் காணலாம்.

# யாழ். குடாநாட்டில் மழை தொடரும்: பொது மக்களுக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக கடும் மழையுடன் கூடிய காலநிலை தொடருமென யாழ் வளிமண்டளவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இடைப்பருவப் பெயர்ச்சி காலநிலை காரணமாக டிசம்பர் மாதம் வரையில் தொடர்ச்சியாக மழை பெய்யும் என்றும் இது டிசம்பர் மாதத்தின் பின்னர் கடும் காற்று மற்றும் இடியுடன் கூடிய அடைமழையாக மாறும் வாய்ப்புக்களும் உள்ளதாகவும் யாழ் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகின்றது. யாழ் குடாநாட்டில் மழை பெய்யும் வேளையில் வீசக் கூடிய கடுமையான காற்று குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் எனவும், தாழ் நிலப்பகுதி மக்கள் அனர்த்தங்களுக்கு ஏற்றபடி தயாராக இருக்குமாறும் யாழ் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

யாழ் மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் இரவு நேரத்தில் அதிக மழைவீழ்ச்சி காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாரத்தில் அதிக மழை வீழ்ச்சி காணப்படும் என்றும், மின்னல் தாக்கம் அச்சுவேலி, காங்கேசன்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் அதிகளவில் இருக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடுமையான காற்று மணித்தியாலத்திற்கு 20 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வேகத்தில் வீசலாம் எனவும், யாழ் மாவட்டத்தின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் கடும் மழையைத் தொடர்ந்து வீதி ஓரங்களில் வெள்ளம் தேங்கத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான வீதிகள் உட்பட உட்புற வீதிகளும் கூட காப்பெற் இடும் பணிக்காக - கடந்த காலத்தில் இருந்ததிலும் பாக்க உயர்த்தப் பட்டு வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக கடந்த காலத்தில் இருந்த பல வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளதுடன் வெள்ளம் வடிந்தோடும் இடங்களும் கூட வீதிகள் உயர்த்தப்பட்டமையால் வடிந்தோட முடியாத நிலமையில் காணப்படுகின்றன.

இதன் காரணமாக வீதியோரங்களில் வெள்ளம் தேங்குவதுடன் வீதியோரங்களில் உள்ள பள்ளமான காணிகளிலும் வெள்ளம் தேங்கத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் காணப்படும் நிலையில் இத்தகைய வெள்ளம் தேங்குவதின் மூலம் மேலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



# பொதுமக்கள் நினைத்தால் மக்களுக்கு பாரிய நன்மை

## யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் நடைபெறும் மக்கள் தினத்தில் யாழ். மாவட்ட பொது மக்கள் கலந்துகொள்வதுடன் தமது பிரச்சினைகளைக் கூறி உரிய தீர்வுகளையும் பெற்றுவருவதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரெரா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு புதன்கிழமையும் இடம்பெறும் பொதுமக்கள் தினத்தில் வட மாகாண பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்கின்றார்கள்.

இந்த நாளில் பொலிஸார் சம்பந்தமான குறைகள் அதனை தமக்கு பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக முறையிடலாம் எனவும் மற்றும் பொலிஸ் நிலையங்களில் முறையிடப்பட்டும் நீண்ட நாட்களாகியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அது சம்பந்தமாகவும் மற்றும் பொதுமக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் முறையிடலாம்.

குறிப்பிட்ட தினத்தில் தம்மை சந்திக்கும் பொதுமக்களுக்கு வேண்டிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் திருப்தியுடன் செல்வதாகவும் மேலும் தெரிவித்தார்.

**கொலைக் குற்றச்சாட்டு:**

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவருக்கு கண்டியில் மரணதண்டனை விதிப்பு

புஸ்ஸலாவ, ரம்பொடை பெரட்டாசி தோட்டத்தைச் சேர்ந்த ஒருவரை கூரான ஆயுததத்தால் வெட்டியும் பொல்லுகளால் தாக்கியும் கொலை செய்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்க கண்டி மேல் நீதிமன்றம் நேற்று மரணத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் அவர்களுடைய மகன் ஆகிய மூவருக்குமே கண்டி மேல்நீதிமன்ற நீதவான் மணிலால் வைத்தியதிலக்க மரணத் தண்டனை விதித்துள்ளார்.

ரம்பொடை பெரட்டாசி தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதான முதியன்ஸலாகே செனரத் பண்டா என்பவர் கூரான ஆயுதங்களினால் தாக்கப்பட்ட நிலையில் கடந்த 2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலைக் குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக இனங்கானப்பட்ட அதே தோட்டத்தைச் சேர்ந்த மாரிமுத்து கோவிந்தசாமி (வயது 54), அவரது மனைவியான இந்திராணி வைத்தியலிங்கம் (வயது 49) மற்றும் அவர்களுடைய மகனான கோவிந்தசாமி ஆகிய மூவருக்குமே மரணத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைக்குற்றச்சாட்டு தொடர்பிலான ஆரம்பக்கட்ட விசாரணை கண்டி நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றதன் பின்னர் வழக்கு கண்டி மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு மேல்நீதிமன்ற நீதவான் மணிலால் வைத்தியதிலக்க முன்னிலையில் இடம் பெற்று வந்தது.

இவ்விசாரணைகளின் போது மனுதாரர் தரப்பில் அரச சட்டத்தரணி உதய கருணாதிலக்கவும் எதிராணிகள் சார்பில் சட்டத்தரணி மர்வின் சில்வாவும் ஆஜராகி வந்தனர்.

இருதரப்பு சட்டத்தரணிகளின் தொகுப்புரைகளின் பின்னர் வழக்கு விசாரணைகள் முடிவுற்றதையடுத்து இது குறித்து ஆராய்ந்த நீதவான் கொலைக் குற்றச்சாட்டில் மூவரையும் குற்றவாளிகளாக இனங்கண்டு மூவருக்கு மரணத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# மன்னாரில் மீன் விலை வீழ்ச்சி: கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

கடந்த சில வாரங்களாக மன்னாரில் கடல் மீன்களின் விலையில் பாரீய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள் பாரீய நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலும் அதிகளவான மீன்கள் பிடிபடுகின்றன.

குறிப்பாக சூரை மீன்கள் நாளாந்தம் பல ஆயிரக் கணக்கில் பிடிபடுகின்றன.

இந்நிலையில் மன்னாரில் சூரை மீன் ஒரு கிலா 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்கப்பட்டு வந்தது. தற்போது குறித்த விலையிலும் பார்க்க குறைவடைந்துள்ளது.

தற்போது தென்பகுதிகளிலும் அதிகளவான மீன்கள் பிடிபடுகின்றமையினால் மன்னாரில் இருந்து கொழும்புக்கான மீன் ஏற்றுமதி தற்போது பாதித்துள்ளது.

இதே வேளை தென்பகுதியில் பிடிபடு கின்ற மீன்களும் மன்னாருக்கு கொண்டுவரப்பட்டு மன்னார் சந்தை களில் விற்பனை செய்யப்படு கின்றன.

தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றமையினால் மீனவர்கள் மிஞ்சுகின்ற மீன்களை கருவாடு போட முடியாத நிலையில் உள்ளதாகவும் அளவுக்கு அதிகமாக பிடிபடுகின்ற மீன்களை கடலில் தட்டி விடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.



# மாடிக் கட்டடத்தில் தீ விபத்து

அத்துருகிரிய பகுதி கட்டம் ஒன்றில் நேற்று (24) அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துருகிரிய பிரதான வீதியில் உள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் இத்தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அத்துருகிரிய பொலிஸார் தீயணைப்பு படையினரின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

விபத்தில் எவருக்கும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. தீ ஏற்பட்டமைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

கட்டத்தில் தீ பரவியதைத் தொடந்து அத்துருகிரிய பொலிஸ் தீயணைப்பு படையினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சில மணிநேர போராட்டத்தின் முடிவில் தீ பரம்பலை கட்டுப்படுத்தினர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை

## இலங்கையில் சிறுவர், பெண்களின் சீரழிவு ஒரு சமூகப் பிரச்சினை

இலங்கையில் புதிதாக ஒரு சமூகப் பிரச்சினை அதிகரித்து வருகிறது. சிறுவர்கள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு; பாலியல் தொந்தரவு; பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவை அதிகரித்து வருவதாகப் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கடந்த வருடம் மட்டும் சுமார் 1085 சிறுவர், சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று புள்ளி விபரங்கள் தெரிவித்தன. வயது குறைந்த பிள்ளைகள் பாலியல் தொந்தரவிற்கும், துஷ்பிரயோகத்திற்கும், உள்ளாக்கப்பட்ட 1503 சம்பவங்கள் கடந்த வருடம் இடம்பெற்றிருக்கின்றன. இந்த 1503 சம்பவங்களில், 758 சம்பவங்கள் பாலியல் தொந்தரவோடு சம்பந்தப்பட்டவை என்றும், 845 சம்பவங்கள் பாலியல் துஷ்பிரயோகத்தோடு சம்பந்தப்பட்டவை என்றும் அதிகாரபூர்வ புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

வல்லுறவு, தொந்தரவு மற்றும் துஷ்பிரயோக சம்பவங்கள் ஒன்பதில் சம்பந்தப்பட்டவர்கள் தந்தை, சகோதரர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் என்றும் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. சுமார் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர் சம்பந்தப்பட்ட வழக்குகள் மேல் நீதிமன்றங்களில் நிலுவையில் இருப்பதாக ஐ.நாவின் சிறுவர் அமைப்பான 'யுனிசெப்' சுட்டிக் காட்டியுள்ளது. சில வழக்குகள் ஆறு வருடங்களுக்கு மேலாக விசாரணை என்ற போர்வையில் நிலுவையில் இருக்கின்றன.

சிறுவர், சிறுமிகள் சம்பந்தப்பட்ட குற்ற வழக்குகளை விரைவில் விசாரித்து தீர்வு காண்பதற்கான ஒரு முன்னோடித் திட்டமொன்று சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் சில மாவட்டங்களில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பொலநறுவை, கம்பஹா, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் முதன்முதலாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் அம்பாந்தோட்டை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. சிறுவர்களோடு சம்பந்தப்பட்ட வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிறுவர் பிரிவுகள் கையாண்டு வருகின்றன. இந்தச் சிறுவர் பிரிவில் ஐந்து சிரேஷ்ட அதிகாரிகளும், பன்னிரண்டு சட்டத்தரணிகளும் இருப்பதாகத் தெரியவருகிறது. சிறுவர் துஷ்பிரயோகம் என்பது மூன்று வகையானது, மிகப் பாரதூரமான பாலியல் வல்லுறவு ஒன்று, பதினாறு வயதிற்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்குவது இரண்டாவது. பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துவது மூன்றாவது வகையைச் சேர்ந்ததென வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு, பிரதேச செயலாளர் மட்டத்தில் நாடெங்கும் 350 சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவுகளை அமைக்க உத்தேசித்துள்ளது. ஏற்கனவே பல மாவட்டங்களில் இவ்வாறான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களையும், பெண்கள் மீதான தொந்தரவுகளையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தப் பிரிவு மேற்கொள்ளும். அத்துடன் துஷ்பிரயோக சம்பவங்களால் பாதிக்கப்படுவோருக்குப் பாதுகாப்பு மற்றும் சட்ட உதவிகளை வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் இந்தப் பிரிவு எடுக்கும் என்றும் கூறப்படுகிறது.

இலங்கையில் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சம்பந்தப்பட்ட நாலாயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் வருடக் கணக்கில் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கிறதென்றால், பாதிக்கப்பட்டவர்களின் துன்ப, துயரங்களை நாம் ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும். உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் அதனைத் தொடர்ந்து உள ரீதியான பாதிப்புக்கும் உள்ளாவார்கள், இவ்வாறு பாதிக்கப்படும் சிறுவர், சிறுமிகளுக்கு உள ரீதியான உளவளத் துணை ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும்.

இது ஒரு சமூகப் பிரச்சினை. சமூகத்தில் ஏற்படும் கலாசாரச் சீரழிவுகள், பண்பாட்டு விழுமியப் பிறழ்வுகள் ஆகியவை இதற்கு முக்கிய காரணங்களாகும். வகை தொகை இல்லாமல் ஆபாச நூல்கள் சந்தைக்கு விடப்படுகின்றன. இளைஞர், யுவதிகளின் மெலிதான உணர்வுகளைத் தூண்டிவிடக் கூடிய திரைப்படங்கள் கட்டுப்பாடின்றி புழக்கத்திற்கு விடப்படுகின்றன. இலத்திரனியல் ஊடகங்களும் அச்சு ஊடகங்களும் போட்டி போட்டுக்கொண்டு ஆபாசக் காட்சிகளை, இளைஞர்-யுவதிகளின் உணர்வுகளைத் தூண்டிவிடும் விடயதானங்களை கட்டுப்பாடின்றி வெளியிடுவதும் இத்தகைய பிரச்சினைகளுக்கு ஒரு காரணமாக அமைகிறது.

மேற்கத்தய மூன்றாம் தர கலாசார பழக்க வழக்கங்கள், கீழைத்தேய நாடான இலங்கைக்குள்ளும் ஊடுருவி இருப்பதால் பல்வேறு சீரழிவுகளை எமது இளைஞர்கள் மட்டுமல்ல, முழுச் சமுதாயமுமே சந்திக்க வேண்டிய அவல நிலைகள் ஏற்படுகின்றன.

இலங்கையில் முக்கிய மூன்று இனப் பிரிவுகளும், நான்கு முக்கிய சமயப் பிரிவுகளும் இருக்கின்றன. தமிழ், சிங்கள, முஸ்லிம் இன மக்கள் கட்டுப்பாடான கலாசாரப் பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள். பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய இலங்கையிலுள்ள முக்கிய நால்வகைச் சமயங்களும் நல்ல பழக்க வழக்கங்களையே இளைஞர், யுவதிகளுக்குப் போதிக்கின்றன.

செல்லிடத் தொலைபேசிகளும், பாவனைக்கு வந்துள்ள நவீன இலத்திரனியல் உபகரணங்களும் இலங்கையில் சமூக, கலாசார சீரழிவுகளுக்கு முக்கிய காரணிகளாக அமைவதாக அண்மைய ஆய்வொன்று தெரிவிக்கிறது. இலங்கையில் சிறுவர்கள் மற்றும் மகளிரின் நலன்களை கவனிப்பதற்கும் அவர்களை வழி நடாத்துவதற்கும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு ஒன்று இருக்கிறது. இந்த அமைச்சுக்கு வருடா வருடம் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுகிறது. சிறுவர்களுக்கும், மகளிருக்குமென பிரத்தியேகமான பிரச்சினைகளும் இருக்கவே செய்கின்றன. மகளாய், தாயாய், பாட்டியாய் சமூகத்தில் ஒரு பாரிய பொறுப்பை ஒரு பெண் கையேற்கிறாள். இலங்கையில் இடம்பெற்ற மூன்று சகாப்த கால யுத்தம் ஆயிரக்கணக்கான பெண்களை விதவைகளாக்கி இருக்கிறது.


ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமிகளை அநாதைகளாக்கி இருக்கிறது. இவர்களையெல்லாம் வழி நடாத்துவதற்கு தேவை யான பொறுப்பு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சுக்கு இருக்கிறது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி: 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# ரஷ்ய மக்கள் எழுச்சியும் அக்டோபர் 25ம்....

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அகிலத்தினையே அதிர வைக்கும் போராட்டமொன்று இடம்பெற்றது. அது மக்கள் போராட்டம். பங்காளர்களாக விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு முதலாளிகள் திகழ்ந்தனர். பாட்டாளி மக்கள் முதன்மை இடம் வகித்தனர். லெனினின் தலைமையின் கீழ் பாட்டாளி வர்க்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டோருக்கு வழிகாட்டல்களை வழங்கி வந்தனர். மக்கள் போராட்டம் உச்சக் கட்டத்தினை அடைந்த வேளையில், ஆட்சியாளர்கள் ஆட்டம் கண்ட நிலையில் லெனின் 'இதோ, இந்த நிமிடமே அரசினைக் கைப்பற்ற வேண்டுமென யாவருக்கும் அறிவுறுத்தலை வழங்கினர். அவரே கட்டளையிடும் அதிகாரி போலச் செயற்பட்டார். அவர் வழிகாட்டிய, தலைமை தாங்கிய போராட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆறு, காயமடைந்தோரின் தொகை 50. இப் போராட்டமே இன்று அக்டோபர் புரட்சி என்று உலகில் பரந்துபட்டு வாழும் தொழிலாளர்களினால் போற்றப்படுகின்றது. உலகில் இடம்பெற்ற பிரஞ்சுப் புரட்சி, 1905 ரஷ்யப்புரட்சி போன்ற மக்கள் புரட்சிகளைத் துருவி ஆராய்ந்து, இவை எக்காரணங்களினால் தோல்வியுற்றன என்பதைக் கண்டறிந்து லெனின் தமது தோழர்களுடன் அவற்றினைப் பகிர்ந்தாராய்ந்தார். இப்போராட்டங்களில் வலுவாகத் திகழ்ந்த சக்திகள் யாவை என்பதைத் தமது ஆய்வின் மூலம் அறிந்து பாட்டாளி மக்களின் முன் வைத்தார். மார்க்சிய சித்தாந்தத்தின் பிரதான அம்சங்கள் யாவை என்பதை மக்களுக்கு எடுத்து விளக்கினார்.

1917 ஜனவரியில் மாபெரும் வேலைநிறுத்தம் ரஷ்யாவில் ஏற்பட்டது. கிட்டத்தட்ட 95 சதவீதமான தொழிலாளர்கள் அதில் பங்குபற்றினர். நாட்டில் நிலவும் பஞ்சம், பிணி, அந்நிய நாட்டுப் போர் போன்ற இன்னல்களினால் மக்கள் வாடி வதங்கினர். ஜார் மன்னராட்சியோ அல்லது தற்காலிக அரசோ தமது இன்னலைப் போக்கக்கூடிய திராணியற்றவை என்பதை மக்கள் உணர்ந்து கொண்டனர். இந்த உணர்வு விவசாயிகளிடமும், போர் வீரர்களிடமும் மேலோங்கி நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது. பெப்ரவரி 27இல் ஜாரின் ஆட்சி அகற்றப்பட்டது.



விளாடிமிர் லெனின்



லியோன் ட்ரொட்ஸ்கி

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி வென்றது. சோவியத்திற்கு அதிகாரமளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மார்ச் 2இல் முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் தலைமையில் இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்பட்டது. போராட்டத்தின் தலைமை கம்யூனிஸ்டுகளிடம் இருந்தது. அக்கட்சியின் பிரதானமான வழிகாட்டியாக லெனின் விளங்கினார். போராட்டக்காரர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் நோக்குடன் தற்காலிக அரசின் கட்டளையிடும் குழு, போராட்டக்காரர்களின் தலைமை உறுப்பினர்களைச் சிறைப்பிடிக்க முயற்சிகளை மேற்கொள்ள முனைந்தது. போராட்டக்காரர்களுக்கு அனுசரணை வழங்கிய போல்ஸ்விக்குகள் செய்தித்தாள்களை முடக்கினர். தற்காலிக அரசின் நோக்கினைப் புரிந்துகொண்ட லெனின் வெகுஜனங்களின் எழுச்சிக்கு அறைகூவல் விடுத்தார். ஆதரவான பாதுகாப்புத் தரப்பினரின் அனுசரணையையும் கோரினர். போராட்டக்காரர்களின் நோக்கில் ஓரளவு அதிகாரம் பெற்றிருந்த சோவியத்துகளுக்கு ஆளும் அதிகாரம் மாற்றப்பட வேண்டுமென லெனின் கட்டளை பிறப்பித்தார். தொழிலாளர்கள், விவசாயிகள், பாதுகாப்புத் தரப்பினரில் காணப்பட்ட ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கில் மக்கள் எழுச்சிக்கு ஆதரவு நல்கிப் போராடினர். போராட்டக்காரர்களும், அவர்களது ஆதரவாளர்களும் லெனினின் தலைமையை மனப்பூர்வமாக ஏற்று அவரின் கட்டளைக்கிணங்க இயங்கினர். அவர்களிடம் மேலோங்கி நின்ற வர்க்க உணர்வு அவர்களது போராட்டத்திற்கான பங்களிப்பினை வலுவுடையதாகத் திகழச் செய்தது.

மார்க்ஸிசக் கோட்பாடுகளினால் புடம்போடப்பட்ட போராட்டக்காரர்கள் லெனின் தலைமையில் அக்டோபர் 25ஆம் திகதி வெற்றியீட்டினர். இதனை உறுதி செய்து லெனின் அக்டோபர் 25ஆம் திகதி மக்களுக்கு ஓர் அறிக்கையை வெளியிட்டார். போல்ஷ்விக்குகளினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட கோரிக்கை பூரணமாக நிறைவேறியமை குறித்து பரந்துபட்ட மக்கள் மனநிறைவடைந்தனர். லெனின் வெளிநாடுகளுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் இரகசிய ஒப்பந்தங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென்றும், உற்பத்தி மீது உண்மையான கட்டுப்பாட்டினை தொழிலாளர்களே மேற்கொள்ள வேண்டுமென்றும் பிரகடனப்படுத்தினார். மார்க்ஸிச - லெனினிச வழிகளை நடைமுறையில் பின்பற்றியதனாலேயே மக்களுக்கு வெற்றி கிடைத்தது என்பதைப் போராட்டக்காரர்கள் உணர்ந்தனர்.

மார்க்ஸிசம், வர்க்க முரண்பாடுகளை ஒழிக்க வேண்டுமென வலியுறுத்திற்று. முதலாளித்துவ சமுதாய அமைப்பில் இது நிறைவேற்றப்பட முடியாதது. ஆண்டான் - அடிமைச் சமூக அமைப்பு, நிலவுடமைச் சமூக அமைப்பு போன்றவற்றில் காணப்பட்ட வர்க்க முரண்பாடுகள் முதலாளித்துவ சமூக அமைப்பில் வேறு உருவத்தில் திகழ்வதை மார்க்ஸிசம் எடுத்துக் காட்டிற்று. பாட்டாளிகளின் தலைமையின் கீழ் விவசாயிகளும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் போன்றோரும் அணிதிரள வேண்டுமென்பதை லெனின் வலியுறுத்தினார்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

– நா. பாலசிங்கம்

போல்ஷெவிக் புரட்சி (Bolshevik Revolution) எனவும் அறியப்படும் அக்டோபர் புரட்சி (October revolution) 1917 ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியின் இரண்டாம் கட்டமாகும். முதலாவது 1917 பெப்ரவரியில் நிகழ்ந்தது. நவம்பர் 7, 1917 (பழைய ஜூலியன் நாட்காட்டியின்படி 1917 அக்டோபர் 25) இல் நிகழ்ந்த அக்டோபர் புரட்சி, விளாடிமிர் லெனின், மற்றும் லியோன் ட்ரொட்ஸ்கி ஆகியோர் தலைமையில் போல்க்ஷெவிக்குகளால் நடத்தப்பட்டது. இது கார்ல் மார்க்ஸின் கருத்துக்களின் அடிப்படையில், இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்ற முதலாவது பொதுவுடைமைப் புரட்சியாகும்.


இந்தப் புரட்சி, ரஷ்ய இடைக்கால அரசாங்கத்தை வீழ்த்தியது. இதன் பின்னர் 1918 தொடக்கம் 1920 வரை இடம்பெற்ற உள்நாட்டுக் கலகங்களைத் தொடர்ந்து, 1922 இல் சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. தொடக்க காலங்களில் இந்த நிகழ்வு அக்டோபர் எழுச்சி அல்லது 25 ஆம் நாள் எழுச்சி என்று குறிப்பிடப்பட்டது. காலப்போக்கில் அக்டோபர் புரட்சி பெரும் உலகளாவிய முக்கியத்துவம் உடைய நிகழ்வாகக் கருதப்பட்டது. ரஷ்யாவுக்கும், ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் தோன்றிய பனிப்போருக்கான அடித்தளம் இட்ட தொடர் நிகழ்வுகளில் முதன்மையானது இதுவேயாகும்.

# 13ம் திருத்தம் ரத்தானால் அது இந்தியாவுக்கு பெரும் அவமானம்

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சிங்களர்களுக்கு இணையான அரசியல் அதிகாரமும், தன்னாட்சி உரிமையும் வழங்கப்படவேண்டும் என்று அனைத்து உலக நாடுகளும் வலியுறுத்திவரும் நிலையில், ஈழத்தமிழர்களுக்கு இப்போதிருக்கும் ஒரிரு உரிமைகளையும் பறிப் பதற்கான சதித் திட்டம் தீட்டப் பட்டுள்ளது.

இலங்கை இனச் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக 1987ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியப் பிரதமர் இராஜீவ்காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜயவர்தனவும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதனடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு தன்னாட்சி அதிகாரம் உள்ளிட்ட உரிமைகளை வழங்குவதற்காக இலங்கை அரசியல்சட்டத்தில் 13ஆவது திருத்தம் செய்யப்பட்டது.

ஈழத்தமிழர்களுக்கு சிறிதளவாவது அதிகாரம் கிடைக்குமென்றால் அது இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் தான் கிடைக்கும் என்று நம்பப்பட்டு வந்தது. இந்திய ஆட்சியாளர்களும் இந்தப் பிரிவை பயன்படுத்திதான் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தரப்போவதாக கூறிவருகின்றனர்.



அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்க இடையே இடம பெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளை கௌவிவிக்கும் நிகழ்வு 23 ம் திகதி வட மாகாண ஆளுனா் இல்லத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வட மாகாணத்தின் சாா்பில் கலந்து கொண்டு கௌரவிக்கப் பட்ட வீர வீராங்கனைகள் வட மாகாண ஆளுனா் வடமாகாண கல்விப் பணிப்பாளா் செல்வராசா மேலதி கல்விப் பணிப்பாளா் இராதகிருஸ்ணன் ஆளனரின் செயலாளா் இளங்கோவன் உடற்கல்வி மற்றும் மாணவா் அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணப்பாளா் சத்தியபாலன் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியாகளுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.
(வலிகாமம் நிருபா்)

# சகல சட்டமூலங்களையும் ஆளுநரின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாமே

**- உயர் நீதிமன்றத்தில் சுமந்திரன் வாதம்**

வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பிலான எழுத்து மூலமான ஆட்சேபனைகள் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை விடுத்த உத்தரவுக்கிணங்கவே எழுத்து மூலமான ஆட்சேபனைகள் நேற்றுச் சமா்ப்பிக்கப்பட்டன.

திவிநெகும சட்டமூலத்திற்கு ஆதரவாகவும் ஆட்சேபித்தும் தாக்கல் செய்யப்பட்ட 14 மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த மூன்று தினங்களாக உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு முன்னிலையில் நடைபெற்றது.

வாழ்வின் எழுச்சிச் சட்டமூலம் மாகாண சபைகளில் நிறைவேற்றப்படாத பட்சத்தில் அதனை நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று சிரேஷ்ட அரச சட்டத்தரணி உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அவரது வாதத்தை மறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சேபனை மனு சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், வாதிட்டார்.

மாகாணசபைகளுக்கு கையளிக்காமல் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள முடியுமாயின் சகல சட்டமூலங்களையும் மாகாண சபைகளுக்கு கையளிக்காது ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இருதரப்பு வாதப் பிரதிவாதங்களையும் கவனத்திற்கொண்ட உயர்நீதிமன்றம், திவிநெகும சட்டமூலம் தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்க வேண்டியிருப்பதால், மனுக்கள் மீதான எழுத்துமூலமான ஆட்சேபனைகளை இன்று சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது.

# ஆபாசமாக நடந்து கொண்ட அதிபர் கைது

மாணவி ஒருவரிடம் ஆபாசமாக நடந்துகொண்ட அதிபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலையொன்றைச் சேர்ந்த அதிபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த அதிபர் பாடசாலை அறையொன்றில் வைத்து மாணவியின் முன்னிலை யில் தனது ஆடைகளை களைந்து ஆபாசமாக நின்றுள்ளார்.

இது தொடர்பில் குறித்த மாணவியின் பெற்றோர் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்தே குறித்த அதிபரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

# கொரிய மொழி பரீட்சை முடிவுகள் வெளியாகின

கொரிய மொழி பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன. இந்த முடிவுகளை www.slbfe.lkஎன்ற இணையத் தளத்தின் ஊடாக பார்வையிட முடியும்.

கடந்த ஒக்டோபர் 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் இடம் பெற்ற கொரிய மொழி பரீட்சையில் சுமார் 4,391 பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

கடந்த 5-6 வருடங்களாக டெங்கு நோய் பரவுவது அதிகரித்துள்ளது. கடந்த இரு வருட காலத்தில் டெங்கினால் இறப்போர் தொகை குறைந்துள்ளது. ஆனால் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தொகை உயர்வாகவே உள்ளது.

இதனை குறைக்க அரச நிறுவனங்கள் அடங்கலான சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு தேவை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் டெங்கு நோய் தடுப்பு தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள சுகாதார குழுக்களை அறிவூட்டும் செயலமர்வு நேற்று இலங்கை மன்றக் கல்லூயில் நடைபெற்றது.

இங்கு டெங்கு நோயைத் தடுப்பது குறித்தும் டெங்கு நோயின் தாக்கம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. அமைச்சர் மேலும் கூறியதாவது, டெங்கு நோயை ஒழிப்பதற்காக ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டு அதனூடாக சகல அமைச்சுக்களையும் இணைத்து பரந்தளவில் தேசிய டெங்கு ஒழிப்பு திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்காக சகல அரசாங்க நிறுவனங்களிலும் சுகாதாரக் குழுக்கள் அமைக்குமாறு அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ள போதும் 50 வீதத்திற்கும் குறைவான அரச நிறுவனங்களிலே சுகாதாரக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு தொடர்பான தேசிய திட்டம் வெற்றியளிக்க சகல அரச நிறுவனங்களும் பங்களிக்க வேண்டும். சுகாதார அமைச்சினால் மாத்திரம் இதனை செய்ய முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# லெபனானில் உள்ள இலங்கையர்களுக்கு விசேட ஏற்பாடு

லெபனானில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

லெபனானில் அவசர நிலைமை ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சும், லெபனானுக்கான இலங்கைத் தூதரகமும் அறிவித்துள்ளது.

அண்மைய நாட்களாக லெபனானின் பல பகுதிகளில் கலவரங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பற்ற இடங்களுக்கு செல்ல வேண்டாம் என இலங்கையர்களுக்கு தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

லெபனானின் நிலைமை குறித்து 24 மணித்தியால கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர நிலைமைகளின் போது இலங்கையர்களை மீள அழைப்பதற்கும், பாதுகாப்பு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானில் சுமார் 80000 இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

# வடக்கு, கிழக்கு சிங்கள மக்களின் உரிமைகள் குறித்து எவரும் குரல் கொடுப்பதில்லை!

## ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்

வடக்கு, கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் உரிமைகள் குறித்து எவரும் குரல் கொடுப்பதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். சர்வதேச சமூகத்திற்கு அஞ்சி வடக்கு கிழக்கு வாழ் சிங்கள மக்களின் உரிமைகள் தொடர்பில் எவரும் குரல் கொடுப்பதில்லை.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் பல சிங்கள குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. எனினும், தற்போது சொற்ப குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன.

போரின் பின்னர் நாவற்குளி பிரதேசத்தில் குடியேறச் சென்ற சிங்கள குடும்பங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

ஜாதிக ஹெல உறுமய கட்சி இனவாதக் கோட்பாடுகளை முன் வைத்த போதிலும், இனக் குரோதங்களை தூண்டுவதில்லை.

தேசிய பிரச்சினைகளின் போது தைரியமாக ஜாதிக ஹெல உறுமய கட்சி குரல் கொடுத்து வருகின்றது எனவும் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய மக்கள் எழுச்சியும் அக்டோபர் 25ம்....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்று தம் நாட்டிலிருந்த நிலைமையையிட்டுப் பகிரங்கமான கலந்துரையாடல்களிலும், விவாதங்களிலும் லெனின் ஈடுபட்டார். இதன் விளைவாகப் பரந்துபட்ட மக்களிடையே மார்க்ஸிச தத்துவத்தினைப் பற்றிய தெளிவும், அறிவும் மேலோங்கிற்று. மக்கள் உறுதியுடன் செயற்படுவதற்கு அவர்களுக்கு மார்க்ஸிசம் பற்றிய தெளிந்த அறிவு வழிகாட்டிற்று.

தொழிலாளி வர்க்கம், விவசாயிகளை மட்டும் நேச சக்திகளாகக் கொள்ளவில்லை. புத்திஜீவிகள், அலுவலக ஊழியர்கள், சிறு முதலாளிகள் ஆகியோரையும் போராட்டத்திற்கான சமூக அடித்தளமாக அரவணைத்துக் கொண்டது. அக்டோபரில் இடம்பெற்ற போராட்டத்தில் தொழிலாளர்கள் இதனை முற்றாக உணர்ந்து செயற்பட்டனர். ஒடுக்கப்பட்டோர் சகலரையும் தொழிலாளி வர்க்கம் ஒன்றிணைத்து தலைமை தாங்கிற்று. லெனின் பாட்டாளி வர்க்கத்தினரை ஏழை விவசாயிகள், பூரணமற்ற பாட்டாளிகள் ஆகியோருடன் நெருக்கமாகக் கைகோர்த்துப் போராடும்படி வழிகாட்டினார்.

முதலாளித்துவ - ஜனநாயகப் போராட்டங்கள் சரியான முறையில் வெற்றி பெறுவதற்குப் பாட்டாளிகள் தெளிந்த அரசியல் அறிவுடையவர்களாகத் திகழ வேண்டுமென லெனின் எடுத்துரைத்தார். அத்தோடு பாட்டாளி வர்க்கம் மிகவும் நெருங்கிய ஒற்றுமையைப் பரந்துபட்டுக் காணப்படும் அரைகுறைப் பாட்டாளிகளுடனும், நகர்ப்புறு, கிராமப்புறப் போராட்ட சக்திகளுடனும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார். இதனை அக்டோபர் போராட்டத்தில் பாட்டாளிகள் கைக்கொண்டனர். பாட்டாளிகள் தமது போராட்டத்தில், போல்ஷ்விக்குகளின் தலைமையின் கீழ் லெனின் காட்டிய பாதையைப் பின்பற்றினர். மக்களின் மார்க்ஸிச அறிவும், மார்க்ஸிச நடைமுறையும் ஒருங்கிணைந்து செயற்பட்ட முறையும் போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் சென்றது என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

# நேற்று ஐ.நா தினம்




ஐ.நா தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 24ல் கொண்டாடப்படுகிறது. ஐ.நா அமைப்பின் நோக்கம், சாதனை, எதிர்காலத் திட்டம் போன்றவற்றை மக்களிடம் சேர்ப்பது இத்திட்டத்தின் நோக்கம். முதல் உலகப் போர் நடந்த போது அது போல் மீண்டும் ஒரு பயங்கரம் நடக்கக் கூடாது என உலக நாடுகள் எண்ணின. அதற்காக உலக நாடுகளின் ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்க முயற்சித்தனர். அது தோல்வியில் முடிந்தது. அதன் பின் இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டு உலகில் பேரழிவை ஏற்படுத்தி யது.

இனி இன்னொரு போர் உலக நாடுகளிடையே ஏற்பட்டுவிடக் கூடாது. உலகில் அமைதியும் சமநிலையும் ஏற்பட வேண்டும் என்பதற்காக 1945 ஏப்ரல் 25 மற்றும் ஜூன் 26இல் சான்பிரான்சிஸ்கோ நகரில் உலக நாடுகளின் கூட்டம் நடந்தது. அதன் விளைவாக ஐ.நா சபை 1945 அக்டோபர் 24ல் தோற்றுவிக்கப்பட்டது. இச்சபை முறைப்படி செயல்படத் துவங்கிய அக்டோபர் 24 ஐ.நா தினமாக அறிவிக்கப்பட்டது. 51ல் இருந்து 193 அமைதியை விரும்பும் எந்த நாடும் இதன் உறுப்பினராகச் சேரலாம். ஐ.நா தொடங்கப்பட்ட போது 51 உறுப்பு நாடுகள் இருந்தன. தற்போது 193 நாடுகளாக உயர்ந்துள்ளன.

ஐ.நா.வின் நிரந்தர உறுப்பு நாடாக அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ர்'யா, பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் உள்ளன. நிரந்தரமாக இல்லாத நாடுகளில் இந்தியா உள்ளிட்ட 10 நாடுகள் ஒப்பந்த அடிப்படையில் நிரந்தர உறுப்பினராக உள்ளது. ஐ.நா.வின் அலுவலக மொழிகளாக ஆங்கிலம், சீனம், அரபி, பிரெஞ்சு, ர்'யன், ஸ்பானி' ஆகிய 6 மொழிகள் உள்ளன. 5 ஆண்டுக்கு ஒருமுறை உலகில் உயர்ந்த பதவியாக ஐ.நா.வின் பொதுச்செயலர் பதவி கருதப்படுகிறது. இந்த அமைப்புத் தொடங்கிய 60 ஆண்டுகளில் இதுவரை 6 பேர் அதன் பொதுச் செயலர்களாக இருந்துள்ளனர். இவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஒருவரே இருமுறை இப்பதவியை வகிக்கிலாம். அந்த வகையில் இதுவரை பதவி வகித்த அனைவரும் இருமுறை பதவி வகித்துள்ளனர். தற்போதைய ஐ.நா பொதுச்செயலராக அமெரிக்க ஆத ரவு நாடான தென்கொரியாவைச் சேர்ந்த பான்-கீ-மூன் இரண்டாவது முறையாக நீடிக்கிறார். உலக நாடுகளி டையே அமைதி ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் ஐ.நா துவங்கப்பட்டது. இன்று இந்த அமைப்பு வல்லரசு நாடுகளின் பிடியில் உள்ளது.

U.N.O. (United Nations Organisation) என்பதன் தமிழாக்கம் ஐக்கிய நாடுகள் சபை என்பதாகும். ஐக்கிய நாடுகள் என்பதைத்தான் சுருக்கமாக ஐ.நா. என்பார்கள். ஐ.நா.வின் நோக்கங்களையும், சாதனைகளையும் உல கெங்கும் எடுத்துக் கூறுவது இந்த தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஐ.நா. அமைப்புக்கு முன்னமே இது போன்ற பல சர்வதேச அமைப்புகள் உருவாகியிருந்தன. அவற்றுள் முக்கியமானது முதல் உலகப் போருக்குப் பின் 1919ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சங்கம் (League of Nations) ஆகும். இந்த அமைப்பும் உலக சமாதானத்தைப் பேணுதல் என்றபிரதான நோக்கத்தை கொண்டிருந்தது. இருப்பினும் அதனால் தனது செயல் பாட்டை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியவில்லை. ஏனெனில் இதில் அனைத்து நாடுகளும் அங்கம் வகிக்க வில்லை. இதில் ஏற்பட்ட தோல்வியே இரண்டாம் உலகப் போருக்குக் காரணமாக அமைந்தது.

இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவு காரணமாக அப்போரை நிறுத்தும் நோக்கத்துடன் சில உலகத் தலைவர்கள் ஒன்று கூடி சமாதானத்தை நிலைநாட்டவும், எதிர்காலத்தில் இத்தகைய யுத்தங்கள் ஏற்படுவதை தடுக்க வேண்டும் என்றநோக்கத்துடனும் உருவாக்கிய அமைப்பே ஐ.நா. சபை ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காக சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்த சுதந்திர நாடுகளின் ஒரு தனித்துவமான அமைப்பாகும். ஐ.நா. என்பது அதில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பு நாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பு.

ஐ.நா.வின் பணிகளை நெறிப்படுத்தும் விதிகளையும் கோட்பாடுகளையும் கொண்ட ஆவணமே ஐக்கிய நாடுகள் சாசனம் (UN Charter) என்றழைக்கப்படுகிறது. உறுப்பு நாடுகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் பொது லட்சியங்களை எட்டுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தெரிவிக்கும் வழிகாட்டி நெறிமுறைகள் அதில் அடங்கி உள்ளன. ஒரு நாடு ஐ.நா.வில் உறுப்பினராக சேரும்போது இச்சாசனத்தின் விதிகளை ஏற்று கையொப்பமிட வேண்டும்.

1945ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் தேதி ஐ.நா.சாசனம் உருவாக்கப்பட்டு 51 நாடுகளின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்பட்டது. ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி ஆரம்பத்தில் இந்த அமைப்புக்கு அஸ்திவாரமிட்ட பிரிட்டன், ர்'யா, பிரான்ஸ், அமெரிக்கா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் நிரந்தர பாதுகாப்புக்குரிய உறுப்பு நாடுகளாகும். ஐ.நா.வின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு.உலக நாடுகளில் அமைதியை நிலை நிறுத்துவது, நாடுகளிடையே நல்லுறவை வளர்ப்பது,

ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும், பசி, பிணி, கல்லாமை ஆகியவற்றை ஒழிக்கவும் கூட்டாக முயற்சி செய்தல்

இந்தக் குறிக்கோள்களை எய்துவதில் உலக நாடுகளுக்கு உதவும் பொருட்டு ஒரு பொது அரங்கமாக செயல்படுதல்.

"ஐக்கிய நாடுகள்" என்றபெயரை முன்மொழிந்தவர் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பிராங்ளின் ரூஸ்வெல்ட் ஆவார். ஐ.நா. சாசனம் கையெழுத்திடப்படுவதற்கு சில வாரங்கள் முன்பாக 'ரூஸ்வெல்ட் காலமானார். அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவர் முன்மொழிந்த "ஐக்கிய நாடுகள்" என்றபெயரையே ஏற்றுக்கொள்ள சான் பிரான்சிஸ்கோ மாநாட்டில் பங்குபெற்றஅனைத்து நாடுகளும் சம்மதித்தன.

இதன் தலைமையகம் அமெரிக்கா நாட்டில் நியுயார்க் நகரில் உள்ளது. தலைமையகத்தில் 39 மாடிகளைக் கொண்ட செயலகக் கட்டிடம், உறுப்பு நாடுகள் கூடுகின்றபொதுச்சபை கட்டிடம் மற்றும் டாக்ஹாமர்ரீல்ட் நூலக கட்டிடம் என்று மூன்று முக்கியமான கட்டிடங்கள் உள்ளன. இந்தத் தலைமையக கட்டிடத் தொகுதி 1949, 1950ம் ஆண்டுகளில் ஜோன் டி, ராக்பெல்லர் ஜூனியர் வழங்கிய 8.5 மில்லியன் டாலர்கள் நன்கொடையைக் கொண்டு வாங்கிய நிலத்தில் கட்டப்பட்டது.

ஐ.நா.சபையின் சின்னத்தில் வெளிர்நீல நிற பின்னணியில் வெள்ளைநிறத்தில் ஐக்கிய நாடுகள் இடம் பெற்றிருக்கும். போரைக் குறிக்கும் சிவப்பு வண்ணத் திற்கு எதிராக நீல நிறம் தேர்ந்தெடுக்கப்பட்டது. வெள்ளையும் நீலமும் ஐ.நா.








அமைப்பின் அலுவல்சார் வண்ணங்களாக உள்ளன. ஐ.நா.வின் அலுவலக மொழிகளாக அரபிக், சைனிஸ், ஆங்கிலம், பிரெஞ்ச், ருூ'யன் மற்றும் ஸ்பானி' ஆகிய மொழிகள் உள்ளன. தலைமையகத்தில் செயல் மொழிகளாக ஆங்கிலமும், பிரெஞ்ச் மொழியும் உள்ளன. 1945ம் ஆண்டு இந்தியா ஐ.நா.வின் உறுப்பினராக ஆனது. இதன் தற்போதைய பொதுச் செயலர் பான் கி மூன்.

ஐ.நா.சபை சர்வதேச உதவி வழங்கும் பல அமைப்புகளை உருவாக்கியுள்ளது. சிறுவர்களை பராமரிக்கும் யுனிசெப் நிறுவனம் (UNICEF)அகதிகளை பராமரிக்கும் ருரேஊசு நிறுவனம், மேம்பாட்டு திட்டங்களுக்கான UNPF நிறுவனம், மசடஊ எனப்படும் மக்கள் தொகை நிதியம் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஐ.நா. அமைப்பின் முக்கியமான ஏஜென்சி நிறுவனங்களாக ஐஆகு எனப்படும் சர்வதேச செல-ாவணி நிதியம், றுழசடன டியமெ எனப்படும் உலக வங்கி, ஐடுழு எனப்படும சர்வதேச தொழிலாளர் கழகம், WHO எனப்படும் உலக சுகாதார நிறுவனம், கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கான யுனெஸ்கோ நிறுவனம் போன்றவை செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளில் கடைபிடிக்கப்படும் உலக மக்கள் தொகை தினம், உலக சுற்றுச்சூழல் தினம் போன்றசர்வதேச தினங்களை அறிவிப்பதும் இதன் பணிகளில் ஒன்றாகும். ஐ.நா. அறிவித்த முதல் சர்வதேச தினம் எதுவென்றால் ஆண்டுதோறும் டிசம்பர் 10ம் தேதி கொண்டாடப்படும் மனித உரிமை தினம் ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபை 6 முக்கிய அமைப்புகளைக் கொண்டது. இதில் சர்வதேச நீதி மன்றம் நீங்கலாக ஏனைய ஐந்து அமைப்புகளும் நியுயார்க்கிலுள்ள ஐ.நா.தலைமையகத்திலிருந்தே இயங்கி வருகின்றன.

(1) ஐ.நா. பொதுச்சபை (General Assembly)
(2) ஐ.நா. பாதுகாப்பு மன்றம் (Security Council)
(3) ஐ.நா. பொருளாதார சமூக மன்றம் (Economic and Social Council)
(4) ஐ.நா. பொறுப்பாட்சி மன்றம் (Trusteeship Council)
(5) ஐ.நா. செயலகம் (Secretariat)
(6) சர்வதேச நீதி மன்றம் (International Court of Justice)

ஐ.நா. பொதுச்சபை: இது ஐக்கிய நாடுகளின் முக்கியமானதொரு அங்கமாகும். இதில் எல்லா நாடுகளுக்கும் சம உரிமை அளிக்கப்படும். ஐக்கிய நாடுகளின் வரவு செலவுகளைக் கண்காணிப்பதும், நிரந்தரம் அல்லாத உறுப்பினர்களை பாதுகாப்புச் சபைக்குத் தேர்ந்தெடுப் பதும், பொதுச்சபையின் தீர்மானங்களைப் பரிந்துரைப் பதும் இச்சபையின் முக்கிய கடமைகளாகும்.

ஐ.நா. பாதுகாப்பு மன்றம்: சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பினைப் பராமரிப்பது இதன் முக்கிய கடமையாகும். ஐ.நா. சாசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி அமைதி காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பன்னாட்டு பொருளாதார தடைகளை விதித்தல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் எடுத்தல் போன்றஅதிகாரங்கள் இதற்கு வழங்கப்பட்டுள்ளன.

ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக சபை: பொருளாதார மற்றும் சமூக தொடர்பான வி'யங்களை ஒருங்கிணைக் கும் பொறுப்புடைய அமைப்பாகும். உலக பொருளாதார மற்றும் சமூக பிரச்சனைகளை விவாதித்து உறுப்பு நாடு களுக்கும், ஐ.நா. அமைப்பிலுள்ள ஏஜென்சி நிறுவனங் களுக்கும் ஓர் செயலாக்கத் திட்டத்தை வகுப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

ஐ.நா. பொறுப்பாட்சி மன்றம்: இது ஐக்கிய நாடுகளின் பொறுப்பில் விடப்பட்ட நாடுகள் மற்றும் பகுதிகளை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாகும். பெரும்பாலான நாடுகள் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு தோற்கடிக்கப்பட்ட நாடுகளாகும். இவற்றில் சில நாடுகள் விடுதலை பெற்றுள்ளன. சில நாடுகள் தன்னாட்சி அடைந்து விட்டன. சில நாடுகள் அண்டை நாடுகளுடன் இணைந்து கொண்டன.

ஐ.நா. செயலகம் : இது ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புகளின் கூட்டங்களுக்கு வேண்டிய ஆய்வுகள், தகவல்கள் மற்றும் வசதிகளை ஒருங்கிணைத்துத் தருகிறது. மேலும் ஐ.நா. நிறுவனத்தின் பிற அமைப்புகள் இடுகின்றபணிகளையும் நிறைவேற்றுகிறது. இதன் ஊழியர்கள் செயல்திறன் மற்றும் நேர்மையின் அடிப்படையில் உலக அளவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இதன் சாசனம் வலியுறுத்துகிறது.

**சர்வதேச நீதிமன்றம்** : என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நீதித்துறை சார்ந்த முதன்மையான அமைப்பாகும். இது நெதர்லாந்து நாட்டின் தலைநகரான தி ஹேக்கில் உள்ளது. உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்படும் சட்டத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், அனைத்துலக அமைப்புகள் முன்வைக்கும் சட்டம் தொடர்பான கேள்வி கள் குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த நீதி மன்றத்தின் முக்கிய பணிகளாகும்.

இந்த நீதிமன்றத்தில் நாடுகள் மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய முடியும். தனிப்பட்டவர்கள் வழக்காட முடியாது. ஒரு நாடு இந்த நீதிமன்றத்தை அணுகும்போது இந்த நீதி மன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்குப் பணிந்து நடப்பதாகவும் அந்த நாடு உறுதியளிக்க வேண்டும். 15 நீதிபதிகள் இந்த நீதிமன்றத்தில் இடம் பெறுவார்கள். ஒரே நாட்டைச் சேர்ந்த இரண்டு நீதிபதிகள் ஒரே சமயத்தில் இடம்பெறமாட்டார்கள். நீதிபதிகளின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகள்.

ஐ.நா.சபைக்கு வருமானம் என்பது அதன் உறுப்பு நாடுகள் செலுத்தும் தொகைதான். அதற்கு வேறு வருமானம் கிடையாது. அனைத்து உறுப்பு நாடுகளும் தமக்கு விதிக்கப்பட்ட தொகையைச் செலுத்த வேண்டும். செலுத்த வேண்டிய தொகையின் அளவு அந்த நாட்டின் பொருளாதார பின்னணி, தேசிய வருமானம், மக்கள் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஐ.நா.வின் ஆண்டு வருமானத்தில் ஐக்கிய அமெரிக்கா 22%, ஜப்பான் 19.6%. ஜெர்மனி 9.8%, பிரான்சு 6.5% தொகையைச் செலுத்துகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை தனது உறுப்பு நாடுகளின் ஐக்கியத்தையே முதன்மையாகக் கொண்டது. உறுப்பு நாடுகளின் பெரும்பான்மையான ஆதரவின்றி எதையும் செய்ய இயலாது. குறிப்பாக பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் ஒருவர் எதிர்த்தாலும் அந்த வி'யம் ஐ.நா.வினால் மேற்கொள்ளப்பட மாட்டாது.

உலகத்தின் சமாதானத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை ஆற்றும் அளப்பரிய சேவையை யாராலும் மறக்க முடியாது. எனினும் ஐ.நா. சபையின் பல முடிவுகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரா ன்ஸ் போன்றவல்லரசு நாடுகளின் விருப்பத்திற்கு உட்பட் டவையாக இருக்கிறதே தவிர அப்பாவிமக்களை பாது காப்பதாகவோ, சிறிய நாடுகளின் இறையாண்மைக்கு உத்திரவாதம் அளிப்பதாகவோ இல்லை என்றகுற்றச் சாட்டு இருந்து வருகிறது.

எல்லா நாடுகளின் மக்களையும் சமமாகப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா. சபைக்கு உண்டு.

# சிலாபத்தில் லொறிகள் மோதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு: 12 பேர் படுகாயம்

சிலாபம் - புத்தளம் வீதி, வட்டக்கல்லி பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 12பேர் காயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிலாபத்திலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த லொறி புத்தளத்திலிருந்து சிலாபம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மற்றுமொரு லொறியுடன் நேருக்கு நேர் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

இதில் லொறியொன்றின் சாரதியொருவரே உயிரிழந்துள்ளார். மற்றைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.



# குமார் டி சில்வாவிற்கு செவாலியார் விருது

இலங்கை ஊடகவியலாளர் குமார் டி சில்வாவிற்கு பிரான்ஸ் அரசாங்கம் செவாலியர் விருது வழங்கத் தீர்மானித்துள்ளது.

தொலைக்காட்சி ஊடகவியலாளர் குமார் டி சில்வாவிற்கு செவாலியர் விருது வழங்கப்பட உள்ளதாக இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகம் அறிவித்துள்ளது.

பிரான்ஸ் கலை இலக்கிய கலாச்சாரங்களை இலங்கையில் பிரல்யப்படுத்தியமைக்காக இந்த விருது வழங்கப்பட உள்ளது.

சுமார் ஒன்றரை தசாப்த காலணமாக பொன்ஜூவார் என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஊடாக குமார் டி சில்வா, பிரெஞ்சு கலாசாரத்திற்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளதாக பாராட்டு வெளியிடப்பட்டுள்ளது.

# துப்பாக்கிச் சூடு: ஒருவர் காயம்

ஹம்பாந்தோட்டை, வலவே தோட்டத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் ஹம்பாந்தோட்டை, கராப்பிட்டி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருவருக்கும் முழங்காலிற்கு கீழேயே துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### திராவகம் வீச்சுச் சம்பவம்:

# குற்றவாளிக்கு சிறைத்தண்டனை

திராவகம் வீச்சுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்ட 7 சந்தேக நபர்களுக்கு 10 தொடக்கம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கண்டி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கண்டி தணிக்கை கண்காணிப்பாளர் லலித் அபன்வல என்பவர் மீது திராவகம் வீச்சுத் தாக்குதல் நடத்தியதாக குறித்த 7 பேர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த திராவகம் வீச்சுத் தாக்குதல் 2002ஆம் ஆண்டு இடம் பெற்றுள்ளது.

சந்தேகநபர்கள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டதால் கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி குற்றவாளிகளுக்கு 10-20 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# நாடாளுமன்றத்தில் மும்மொழிகளிலும் உரையாற்ற எம்.பி.க்களுக்கு உரிமையுண்டு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தில் மும்மொழியிலும் உரையாற்ற உரிமையுள்ளது. மாறாக எந்தவொரு பேசுமாறு அழுத்தம் கொடுக்க முடியாது என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

வாய்மூல விடைக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக சுற்றாடல் அமைச்சரிடம் கேட்கப்பட்டிருந்த கேள்விக்கு பதில் சுற்றாடல் அமைச்சர் ஏ.ஆர்.எம்.ஏ.காதர் தமிழில் பதிலளித்தார்.

ஆனால், சிங்களத்தில் பதில் வழங்குமாறு கயந்த கருணாதி லக்க கூறினார். இதன் போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி. தமிழில் பதில் வழங்கு கையில் சிங்களத்தில் பேசுமாறு அழுத்தம் வழங்க முடியாது. இங்கு உரை பெயர்பாளர்கள் பணிபுரிகிறார்கள். அவற்றை செவி மடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.



இங்கு மற்றொரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிர-தமர் இலங்கை மீது குற்றம் சுமத்திய நாளில் இருந்து ஆளும் தரப்பினர் சபையில் தமிழில் பேசுவதாகக் கூறினார்.

எதிர்த் தரப்பில் இருந்த போது சிங்களத்தில் பேசிய பிரதி அமைச்சர் காதர் ஆளும்தரப்பிற்கு சென்றதும் தமிழில் பேசுவதாக கயந்த கருணாதிலக்க கூறினார்.

# சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் சிறுவர் பாதுகாப்பும் பெற்றோர் திறன் விருத்தி அதிகரிப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை, சாவகச்சேரி, நாவற்குழி, மட்டுவில், போன்ற பகுதிகளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின், யாழ்.மாவட்ட உத்தியோகத்தர்களினால் இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இக்கருத்தரங்கில், பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறுவர்களின் பாதுகாப்பு குறித்த கருத்துக்களை முன்வைத்துள்ளதுடன், தமது கேள்விகளையும் தொடுத்துள்ளனர்.

தெல்லிப்பளை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கருத்தரங்கில், கர்ப்பணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டில் சிறுவர் உரிமைகள் மற்றும் அவர்களுக்கான வசதிகள் அவர்களின் உரிமை-கள் என்பவற்றை வலியுறுத்தி அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

# பிரித்தானியாவால் நாடுகடத்தப்படவிருந்த சிலர் இறுதிநேரத்தில் தரையிறக்கப்பட்டனர்

பிரித்தானியாவில் இருந்து விசேட விமானம் மூலம் இலங்கைக்கு நாடுகடத்தப்படவிருந்த அகதிகளுள் 10 தொடக்கம் 12 பேர் வரையில் விமானத்தில் இருந்து தரையிறக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்கள் இறுதி நேரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த தடையுத்தரவு கோரல் மனுவின் அடிப்படையில், நீதிமன்றம் அவர்களை நாடு கடத்த வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளது.

அவர்களின் வழக்குகளில் வாதாடிய சட்டத்தரணிகள் இந்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளார். நாடு கடத்தலுக்கு எதிராக சுமார் 12 சட்ட அமைப்புகள் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தன.

இந்த மனு மீதான விசாரணையை அடுத்து, தமது கட்சிக்காரர்கள் பலரை நாடுகடத்த தடையுத்தரவு பெற்றுள்ளதாக குறைந்தது மூன்று சட்ட அமைப்புகள் உறுதி செய்துள்ளன.

இலங்கைக்கு இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால், கைது, சித்திரவதை, உயிர் அச்சுறுத்தல் ஆபத்து இருப்பதாக சட்டவாளர்கள் வாதிட்டிருந்தனர்.

தமது கட்சிக்காரர்கள் மூவர் நாடு கடத்தப்படுவதில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளதாக டங்கன் லூவிஸ் சட்டவாளர்கள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஜெய்ன் சட்டவாளர்கள் அமைப்பு, ஒருவரின் நாடுகடத்தலை தடுத்து நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கிடையே, இலங்கைக்கு அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிராக, ஹீத்ரோ விமான நிலையத்துக்கு அருகேயுள்ள குடிவரவுத் தடுப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கை திரும்பியுள்ளனர். பிரித்தானியாவிலிருந்து சுமார் 48 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்த அந்நாட்டு அரசு தீர்மானித்திருந்தது.

இந்த புகலிடக் கோரிக்கையா-ளர்கள் கொழும்பு கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளது. முன்னதாக 60 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படவிருப்பதாக பிரித்தானிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு அறிவித்திருந்தது.

நாடு திரும்பிய இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலங்களை பதிவு செய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் சட்டத்தரணிகள் ஊடாக விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் இறுதி நேரத்தில் இலங்கைக்கு நாடு கடத்தும் நடவடிக்கையை இரத்துச் செய்ததாக பிரித்தானியாவின் முன்னணி ஊடகமொன்று தகவல் வெளியிட்டிருந்தது.

இதேவேளை பல்வேறு காரணங்களுக்காகவும், கல்வி மற்றும் சுற்றுலா விசாக்களிலும் ஐக்கிய இராஜ்ஜியத்துக்குள் நுழையும் பலர் தமது வீசாக் காலம் முடிவடைந்த பின்னர் புகலிடம் கோரி அந்நாட்டு அரசுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு அவர்களை அந்நாடு சொந்த நாடுகளுக்கே திருப்பி வருகிறது. இதன் ஒரு அங்கமாகவே நேற்றைய தினம் ஒரு தொகுதி புகலிடக் கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

# இலங்கையில் பண்பலை ஊடான ஒலிபரப்புச் சேவையும் அலைவரிசை மீளமைப்பும்

இலங்கையில் ஒலிபரப்புச் சேவை தோற்றம்பெற்ற காலத்திலிருந்து சிற்றலை ஊடாகவே நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வந்தன. பின்னர் பிராந்தியங்கள் தோறும் அஞ்சல் நிலையங்களை அமைத்து, சிற்றலை வரிசையில் ஒலிபரப்பாகிவந்த அதே வானொலி நிகழ்ச்சிகளை மத்திய அலைவரிசை ஊடாகவும் தெளிவாகக் கேட்கக்கூடியதாக வசதிகள் செய்யப்பட்டன. எண்பதுகளின் ஆரம்பத்தில் இலங்கையில் F.M (Frequency Modulation) எனப்படும் பண்பலை ஒலிபரப்பு அறிமுகமானது. வானொலி ஊடாக ஒலி அலைகளை துல்லியமாக வழங்கும் தொழில்நுட்பமாக இது அமைந்தது. ஆரம்பத்தில் கொழும்பை மையமாக வைத்தே பண்பலை ஒலிபரப்புச் சேவை மேற்கொள்ளப்பட்டது. இதன் ஒரு அங்கமாகவே தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் இலங்கை வானொலியின் சிற்றி எப்.எம். சேவை இயங்கத் தொடங்கியது.

ஆரம்ப முயற்சியாக இலங்கை வானொலியே பண்பலை ஒலிபரப்பை மேற்கொண்டு வந்தது. தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொன்றாகத் தோற்றம் பெற்று வந்த தனியார் வானொலிகள் அனைத்தும் பண்பலை வரிசை ஊடாகவே தங்கள் ஒலிபரப்பை நடத்தி வருகின்றன.


தொண்ணூறுகளின் இறுதிப் பகுதியிலிருந்து பண்பலை ஒலிபரப்பு நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கை வானொலி உட்பட சகல தனியார் வானொலிகளும் ஒவ்வொரு பிராந்தியங்கள் தோறும் பண்பலை அஞ்சல் கோபுரங்களை அமைத்து, அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள நேயர்கள் வானொலி நிகழ்ச்சிகளை தெளிவாகக் கேட்கக்கூடிய வகையில் வசதிகளை செய்து கொடுத்துள்ளன.

இதுவரை காலமும் ஒரு பண்பலை வானொலி சேவை நான்கு, ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட அலைவரிசைகளைக் கொண்டிருந்தது. ஒரு பிராந்தியத்தில் வானொலி சேவையொன்றுக்கு ஒதுக்கப்பட்ட அலைவரிசை, இன்னொரு பிராந்தியத்தில் வேறொரு வானொலி சேவைக்கு உரியதாகவும் அமைந்திருந்தது. இவ்வாறாக பல அலைவரிசைகள் பயன்பாட்டில் இருந்து வருவதால், புதிதாக ஆரம்பமாகும் ஒரு வானொலி சேவைக்கு அலைவரிசையை ஒதுக்கமுடியாத சூழ்நிலை உருவாகும் அபாயம் தோன்றக்கூடும் என்பதால்

**இதுவரை காலமும் ஒரு பண்பலை வானொலி சேவை நான்கு, ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட அலைவரிசைகளைக் கொண்டிருந்தது. புதிதாக ஆரம்பமாகும் ஒரு வானொலி சேவைக்கு அலைவரிசையை ஒதுக்கமுடியாத சூழ்நிலை உருவாகும் அபாயம் தோன்றக்கூடும் என்பதால் தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு இது விடயத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியது.**

தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு இது விடயத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியது.

இதன்பிரகாரம் இனிமேல் ஒரு வானொலி சேவை நாடளாவிய



ரீதியில் இரு அலைவரிசைகளில் மட்டுமே இயங்க முடியும். இந்த செயற்பாடு எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஸ பெல்பிட்ட அண்மையில் ஊடகவியலாளர்களுக்கு தகவல் தெரிவிக்கையில், இலங்கையில் 23 தொலைக்காட்சி நிலையங்களும், 45 வானொலி நிலையங்களும் இயங்கிவருவதாகவும், நாடளாவிய ரீதியில் 5000 தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

நவம்பர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் 'ஒரு வானொலி சேவைக்கு இரு அலைவரிசைகள்' என்ற திட்டத்தின்படி, தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினாரால் இலங்கையிலிருந்து இயங்கும் சகல தமிழ், சிங்கள, ஆங்கில வானொலி சேவைகளுக்கும் புதிய அலைவரிசைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இதன்படி, தமிழ் ஒலிபரப்புச் சேவைகளான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவை 102.1, 102.3 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல், 104.7, 104.9, வசந்தம் எப்.எம். சேவை 102.6, 102.8 அலை எப்.எம். சேவை 91.4, சூரியன் எப்.எம் சேவை 103.4, 103.6, சக்தி எப்.எம். சேவை 103.9, 104.1 வெற்றி எப்.எம். சேவை 90.4, 90.6 யாழ். எப்.எம். சேவை 90.1, ஆகிய அலைவரிசைகளில் இயங்கவிருக்கின்றன.

இது ஒருபுறமிருக்க, வெற்றி எப்.எம். வானொலி நிகழ்ச்சிகள் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதில்லை. இதற்கு தொழில் நுட்பக் கோளாறுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. 101.5 பண்பலை ஊடாக வெற்றி எப்.எம். நிகழ்ச்சிகள் வடபகுதி நேயர்களுக்காக ஒலிபரப்பப்பட்டு வந்தன.

இதுபோலவே அலை எப்.எம். வானொலி நிகழ்ச்சிகளையும் கடந்த இரண்டு மாதங்களாக யாழ்ப்பாணத்தில் கேட்க முடியாமலிருக்கிறது. எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் அலைவரிசை மீளமைப்புடன் வெற்றி எப்.எம். மற்றும் அலை எப்.எம். வானொலி நிகழ்ச்சிகளையும் வடபகுதி நேயர்கள் கேட்கக்கூடியதாக இருக்கும் என்று அறிய முடிகிறது.

**- அ. கனகசூரியர்**

# சமூக வானொலியின் பண்புக் கூறுகள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

**பங்கேற்பு ஜனநாயகம்:**

ஒரு குறிப்பிட்ட அபிவிருத்தித்திட்டம் ஒன்று மிகவும் வெற்றிகரமாக மக்களைச் சேர்வதனை உறுதிப்படுத்தும் இயந்திரமே பங்கேற்பாகும். 1980களுக்கு முன்னர் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பெருவழக்காக இருந்த மேலிருந்து கீழ்நோக்கிய (Top down) அணுகுமுறை வழக்கொழிந்த போது கீழிருந்து மேல்நோக்கிய (Bottom Up) அணுகுமுறை வழக்கிற்கு வந்தது. இவ்வணுகுமுறையின் முக்கியமான அம்சமே பங்கேற்பாகும். Chinsaik yoon தான் எழுதிய Participatory development communication என்ற கட்டுரையில; Participatory communication for development என்ற பிரிவில் மக்கள் அபிவிருத்தி செயற்பாடொன்றில் பங்கேற்பு, பங்கேற்பு தொடர்பாடல் என்பன எத்தகைய இடத்தினைப் பெறுகின்றன என்பதனை மிகவும் விரிவாக விளக்குகின்றார். சமூகவானொலியில் பங்கேற்பு எத்தகைய இடத்தினை வகிக்கலாம் என்பதைப்பற்றித் தேட முயற்சிப்பவர்களுக்கு இவ்விளக்கங்கள் மிகவும் .பயனுடையன.



மக்களை நவீன செல்நெறிகளுக்கு ஏற்ப இயைபடையச் செய்யும் இயலுமையினை வளர்த்தெடுக்கும் ஆற்றலை சமூக வானொலி அதிகம் கொண்டிருப்பதற்குக் காரணம் அதில் உள்ள பங்கேற்புப் பொறிமுறையாகும். விவசாயம், சுகாதாரம், கல்வி, சமூக மாற்றம் என்பன தொடர்பான அறிவினையும் மக்கள் தாமாக வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பினை பங்கேற்றல் மூலம் மக்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

## வானலை நாதம்

Uphoff (1985) இன் பங்கேற்றல் பற்றிய கருத்துக்களை Yoon பின்வருமாறு எடுத்தெழுதுகின்றார்,

1) அமுலாக்கத்தில் பங்கேற்றல் - Participation in implementation,2) மதிப்பிடலில் பங்கேற்றல்- Participation in evolution

3) அறுவடையில் பங்கேற்றல்- Participation in benefits

4) முடிவெடுத்தலில் பங்கேற்றல் - Participation in decision making

இத்தகைய பங்கேற்பு வகைகளை நாம் ஒரு சமூக வானொலியின் செயற்பாட்டை விளக்குவதற்கும் துணையாகக் கொள்ள முடியும். அமுலாக்கத்தில் பங்கேற்றல் என்பது, ஒரு சமூக வானொலியின் உருவாக்கத்தில் மக்களின் பங்கேற்பு முக்கியம் பெறுவதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். சமூகவானொலி ஒன்றின் தேவையை உணர்தல், அத்தேவையினை முன்வைத்தல் என்பனவும் மக்களின் பங்கேற்புடனேயே இடம்பெற வேண்டும்.

சமூகவானொலியைப் பொறுத்தவரை அதன் செயற்பாட்டுக் கட்டங்களில் எந்தவொரு கட்டத்திலும் சமூக உறுப்பினர்கள் அதனை மதிப்பிட்டு அது தொடர்பான பின்னூட்டல்களை வழங்க முடியும். இதனையே மதிப்பிடலில் பங்கேற்றல் என்ற சொற்பிரயோகம் குறிப்பதாகக்கொள்ள முடியும். இலங்கையில் மகாவெலிச் சமூக வானொலி நிகழ்ச்சிகளை மதிப்பிடல் மற்றும் பின்னூட்டல்களை வழங்குதல் என்பனவற்றில் மக்களுக்கு மிகச்சிறப்பான இடத்தினைக் கொடுத்தது.

சமூகவானொலி எப்பொழுதும் மக்களுக்கு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னிற்கும். அதற்கேற்ப மக்கள் முகங்கொடுக்கும் எந்தவொரு பிரச்சினையையும் அது அதிகாரத்திற்கு தெரியப்படுத்தும். தண்ணீர், கல்வி, பாதை, பாடசாலை. என எந்தவொரு விடயம் தொடர்பான பிரச்சினையாக இருந்தாலும் அவை தொடர்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சமூக வானொலி மக்களின் குரலிலேயே அதிகாரத்திற்கு தெரியப்படுத்தும். இவ்வாறு தெரியப்படுத்தி அவை வெற்றியளிக்கும் போது அவற்றின் பலனை அனுபவிப்பதிலும் மக்கள் பங்கேற்பு இடம் பெறும். நன்மையை அனுபவிப்பதில் பங்கேற்றல் எனஇதனைக் கொள்ளலாம்

**- எம். சீ. ரஸ்மின் (மிகுதி அடுத்தவாரம்)**

# வானொலியில் பேச்சு நிகழ்ச்சி ஒலிபரப்பு

நிகழ்ச்சிகளிலெல்லாம் மிக முக்கியமாகக் கருதப்படுவது பேச்சு. மனித அறிவுக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் இன்றியமையாத கருத்துக்களை, எல்லாத் துறைகளிலும், பேச்சுச் சாதனத்தின் மூலம் வெளிப்படுத்துவதிலேயே மிகச் சிறந்த பலன் கிடைக்கிறது. மக்கள் யாவரும் ஒருவருக்கொருவர், நேருக்கு நேர் சந்தித்து, பேச்சு மூலம் தம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள இடமும் காலமும் வசதியாக இல்லாமையினால், பேச்சின் பயனைப் பெறுவதற்காக எழுத்துச் சாதனம் ஏற்பட்டது. ஆனால் இன்று விஞ்ஞான அபிவிருத்தி காரணமாக வானொலி யின் உபயோகமும் பரவத் தொடங்கி, எழுத்து செய்துவந்த காரியங்கள் பலவற்றைப் பேச்சு மூலமே நிறைவேற்ற முடிகிறது. பேசும் பேச்சை வருங்கால உபயோகத்துக்கு வைத்துக் கொள்ளவும், கருத்துக்களை நிரந்தரமாகப் பதிவு செய்யவும் எழுத்து உதவுகிறது. உலகத்தில் நடைபெறும் அன்றாட சம்பவங்களை மக்கள் எல்லாருக்கும் அறிவிக்கும் செய்தியானாலும், இலக்கியம், விஞ்ஞானம், அரசியல், சரித்திரம், பொருளாதாரம் முதலிய துறைகளில் அறிஞர் மனத்தில் அவ்வப்போது எழும் கருத்துக்களானாலும் வாய்ச்சொல் மூலம் வெளியிட்டு அதன் பலனைப் பெறுவதற்கு இன்று வானொலி ஒரு வாய்ப்பான கருவியாக உதவுகிறது.

**- சோ.சிவபாதசுந்தரம் ('ஒலிபரப்புக் கலை' நூலிலிருந்து)**

அந்த மூச்சுக் காற்றிலே வெண்மையான லேசான காகிதப் பணம் பறந்துவிடும் போல, சலசலத்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு வேறு ஒரு ஆரவாரம் ஏற்பட்டது, பயங்கரமான ஆர்ப்பாட்டம் அது, முகம் வெளுக்க விம்பர் தன் சைக்கிளில் ஓடோடியும் வந்து, அத்தனை பணமும் கள்ள நோட்டுகள் என்று தெரிவித்தான். சைக்கிளை முற்றத்தில் போட்டுவிட்டு அவன் உள்ளே சென்ற ஒரு நிமிடத்திற்கெல்லாம் நெப்போலியன் ஆத்திரமாக கூச்சலிடுவது காதில் விழுந்தது.

காட்டுத்தீ போல விஷயம் பண்ணையிலே ஒரு நிமிடத்திற்கெல்லாம் பரவிவிட்டது. அனைத்தும் கள்ள நோட்டுகள்! அவை செல்லாது. மோசடி செய்து மரத்தை தட்டிக்கொண்டு போய்விட்டான் ஃப்ரடெரிக். விலங்குகளை எல்லாம் ஒன்று கூட்டி நெப்போலியன் ஒரு பிரசங்கம் செய்தது.

ப்ரடெரிக்குக்கு மரண தண்டனை விதித்தது அது. அவனைப் பிடித்தவுடன் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் உயிரோடு போட்டுக் கொல்வது என்று தீர்ப்புக் கூறியது நெப்போலியன்.




இவ்வளவு அயோக்கியத்தனமான துரோகச் செயலுக்குப் பிறகு இனி மனிதர்களிடமிருந்து தீச்செயல் எதையும் எதிர்பார்க்கலாம் என்று நெப்போலியன் மிருகங்களை எச்சரித்தது. வெகுநாட்களாக எதிர்பார்க்கப்பட்டிருந்த தாக்குதலை ஃப்ரடெரிக்கும் அவன் வேலையாட்களும் உடனேயே தொடங்கிவிட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்றது நெப்போலியன்.

பண்ணையை நோக்கி வருகிற பாதைகளுக்கெல்லாம் காவலாளிகள் நியமிக்கப்பட்டனர். இதைத் தவிர பாக்ஸ்வுட்டுக்கு நூறு புறாக்கள் விசேஷ தூதர்களாக அனுப்பப்பட்டன. பில்கிங்டனுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் சிநேகமாக இருக்க முடியுமானால் அது நல்லது என்கிற உத்தேசத்துடன் அவன் உறவை நாடித் தூது அனுப்பியது நெப்போலியன்.

மறுநாளே எதிர்பார்த்த தாக்குதலும் தொடங்கிவிட்டது. காலை உணவை அருந்திக் கொண்டிருந்த மிருகங்களிடம் ஃப்ரடெரிக்கும் அவன் வேலையாட்களும் வெளிவாசல் கதவைத் தாண்டி பண்ணைக்குள் வந்துவிட்டார்கள் என்று காவல்காரர்கள் அறிவித்தார்கள். மிருகங்கள் மிகவும் தைரியமாகத்தான் போருக்குக் கிளம்பின. ஆனால் மாட்டுக்கொட்டில் சண்டையில் கிடைத்ததுபோலச் சுலபமாக வெற்றி கிடைக்கவில்லை அவர்களுக்கு.


பதினைந்து மனிதர்கள் வந்திருந்தனர்: அவர்களிடம் பன்னிரண்டு துப்பாக்கிகள் இருந்தன. நூறு அடிதூரத்தில் விலங்குகள் வந்தவுடனேயே அவர்கள் சுட ஆரம்பித்துவிட்டார்கள். பயங்கர வெடிகளையும் குண்டுகளையும் மிருகங்களால் தாங்கமுடியவில்லை.

‘நெப்போலியனும் பாக்ஸரும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும், விலங்குகள் பின்வாங்கின, துரத்தியடிக்கப்பட்டன. பல மிருகங்களுக்கும் காயங்கள் பட்டன.

பண்ணை வீட்டுக்குள்ளும் கொட்டகைக்குள்ளும் புகுந்து கொண்டு, மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை ஓட்டைகள் வழியாகக் கவனித்தன.

(நாளை)


## வரைவோம் வாருங்கள்!



# சிறுவர் அமுதம்

## கோள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் என்ன வேறுபாடு?

நட்சத்திரங்களின் ஒளி விட்டு விட்டுப் பிரகாசிக்கும். கோள்களின் ஒளி நிலையாக இருக்கும். பின்னணியில் நட்சத்திரங்கள் நிலையாக இருப்பது போலவும் கோள்கள் நகர்வது போலவும் தெரியும். மெர்க்குரி, வீனஸ், பூமி, மார்ஸ் ஆகிய நான்கும் சிறிய கோள்கள். இவை சூரியனுக்கு மிக அருகில் இருப்பவை. அனைத்து கோள்களும் சூரி யனைச் சுற்றி வருவதுடன் தமது அச்சிலும் சுழல்கின்றன. இவை நீள்வட்டப் பாதையில் சுற்றுகின்றன. தமது அச்சில் சாய்ந்திருக்கின்றன. தமது அச்சிலும் சுற்றுகின்றன. பூமி 23.5 டிகிரி சாய்ந்திருக்கின்றது.





## முயற்சியும், மன உறுதியும்


அழகான மலைகள் சூழ்ந்த கிராமம். இரண்டு குருவிகள் ஒரு மரத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. ஒருசமயம் பெண் குருவி மூன்று முட்டைகள் இட்டது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் எப்போது வெளியே வரும் என எண்ணி குருவிகள் இரண்டும் ஆவலாகக் காத்திருந்தன.

ஒருநாள் ஆற்றில் நீரோட்டம் அதிகமாக இருந்தது. ஆற்றில் அலை உயர்ந்து கொண்டே இருந்தது. காற்றும் வேகமாக வீசிக் கொண்டிருந்தது. அப்போது ஓர் அலை மேலெழுந்து குருவிகளின் கூட்டையும் அதோடு சேர்த்து உள்ளிருந்த முட்டைகளையும் ஆற்றுக்குள் தூக்கிப் போட்டது.

ஆற்று வெள்ளத்தில் முட்டைகள் அடித்துச் செல்லப்பட்டன. இதை சற்றும் எதிர்பாராத குருவிகள் இரண்டும் மனம் வருந்து அலறின. ஆற்று தேவதையை நோக்கிப் பிரார்த்தனை செய்தன. எனினும் ஆற்று தேவதை அவைகளின் பிரார்த்தனைக்கு செவி சாய்த்ததாகத் தெரியவில்லை! மனம் வருந்திய குருவிகள் தங்களது சிறிய அலகுகளால் ஆற்று நீரை எடுத்துக் கரையில் கொட்டிக் கொண்டிருந்தன. இப்படியே நாட்கள் பல சென்றன.

ஒருநாள் அவ்வழியே வந்த நாரதர், “குருவிகளே, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார். குருவிகள் நடந்ததை விளக்கிக் கூறின. குருவிகள் கூறிய கதையைக் கேட்ட நாரதர் சிரித்துக் கொண்டே, “நீங்கள் செய்யும் இந்த முயற்சி வீண்! ஒருநாளும் ஆற்று நீர் முழுவதையும் உங்களால் எடுத்துவிட முடியாது!” என்று கூறிவிட்டுச் சென்றார்.அவர் கூறியதை எண்ணி மனம் வருந்தாமல், தாங்கள் செய்து கொண்டிருந்த பணியைத் தொடர்ந்து செய்தன அந்தக் குருவிகள். எத்தனை நாட்கள் தொடர்ந்து செய்தாலும் ஆற்றுநீர் குறைந்தபாடில்லை. திடீரென்று ஒருநாள் ஆற்றின் நடுவே ஒரு அழகிய தேவதை தோன்றி, குருவிகளிடம், "குருவிகளே, நான்தான் ஆற்று தேவதை! இதோ பெற்றுக் கொள்ளுங்கள் உங்களது முட்டைகளையும் கூட்டையும்". உங்கள் விடா முயற்சிக்கும் மன உறுதிக்கும் எனது பரிசு என்று ஒப்படைத்துவிட்டுச் சென்றது.





காரை சரியான பாதையில் செலுத்தி வெளியே கொண்டு வாருங்கள். அம்புக்குறி காட்டிய திசையிலேயே காரை செலுத்த முடியும்.

சுடோக்கு எண் 80 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 3 | 1 | 7 | 5 | 4 | 2 | 8 |
| 1 | 8 | 2 | 9 | 4 | 6 | 5 | 3 | 7 |
| 7 | 4 | 5 | 3 | 8 | 2 | 1 | 6 | 9 |
| 8 | 5 | 7 | 4 | 6 | 9 | 3 | 1 | 2 |
| 6 | 1 | 4 | 2 | 3 | 7 | 9 | 8 | 5 |
| 2 | 3 | 9 | 8 | 5 | 1 | 7 | 4 | 6 |
| 4 | 2 | 6 | 5 | 9 | 3 | 8 | 7 | 1 |
| 3 | 9 | 1 | 7 | 2 | 8 | 6 | 5 | 4 |
| 5 | 7 | 8 | 6 | 1 | 4 | 2 | 9 | 3 |

சுடோக்கு எண் 81

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | 4 | | | 7 |
| 7 | | | 5 | | | | 3 | |
| | 9 | | | | | 8 | | |
| 8 | 6 | | | 4 | | 9 | | |
| | | 7 | | | | 3 | | |
| | | 1 | | 3 | | | 6 | 2 |
| | | 9 | | | | | 5 | |
| | 1 | | | | 2 | | | 3 |
| 4 | | | 3 | | 9 | | | |

திவிநெகும சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் எதையும் செய்யும் போல் தெரிகிறது. அதேவேளை அச்சட்டமூலத்தை நாட்டு நலனுக்கான ஒன்று என்பதை விட மானப் பிரச்சினையாகவும் அரசாங்கத்தின் தலைவர்கள் எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்றும் தெரிகிறது. திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதில் அரசாங்கத்தின் தலைவர்கள் எதிர்நோக்கியதைப் போன்ற சிக்கலான பிரச்சினையொன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி இதுவரை வேறெந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதிலும் எதிர்நோக்கியதில்லை. இது அரசாங்கத்தின் சில தலைவர்களை விரக்திக்கே இட்டுச் சென்றுள்ளது போலும்.

இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கு முன் அதற்கு மாகாண சபைகளின் அனுமதியை பெற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதும் அதன்படி மாகாண சபைகளின் அனுமதியை பெறுவதற்காக வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை

எழலாம் என்பதால் தாம் இங்கே அரசியல் பேசவில்லை என்றும் அவர் அந்தப் பேட்டியின் போது கூறியிருக்கிறார்.

கோட்டாபய ராஜபக்ஷ இதற்கு முன்னரும் அதிகார பரவலாக்கல் முறையை பலப்படுத்த வேண்டும் என்ற கருத்திற்கு எதிராக கருத்து வெளியிட்டு இருக்கிறார். இந்தியாவை தளமாகக் கொண்ட ஹெட்லைன் டுடை செய்திச்சேவைக்கு கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் அளித்த பேட்டியொன்றின் போதும் “அதிகார பரவலாக்கல் விடயத்தில் தற்போதைய நிலைமைக்கு அப்பால் செல்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிது“ என அவர் கூறினார்.

ஒன்றாய் வாழ்வதற்கு தற்போதைய அரசியலமைப்பு தலைக்கும் மேல் போதுமானது என்றும் இதற்கு மேல் எதுவும் வேண்டும் என்று தாம் நினைக்கவில்லையென்றும் அவர் அதில் கூறினார். ஆனால் இப்போது அவர் தற்போதைய அதிகார பரவலாக்கல் முறையையும் ரத்துச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார். அதனை வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது தூக்கிப் பிடித்துக் கொண்டுள்ளன.

அமைச்சர் விமல் வீரவன்சவின்



இந்திய தலைவர்கள் வலியுறுத்துவார்கள். இலங்கைத் தலைவர்களும் இணக்கம் தெரிவிப்பார்கள்.

தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் இவ்வாறு இந்த விடயத்தில் வாக்குறுதியளித்து வருவதாக இந்தியாவே இந்த வருட ஆரம்பத்தில் சுட்டிக் காட்டியிருந்தது. இவ்வருடம்

அரசாங்கத்தினால் வெளியிடப்பட் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளிலும் அதிகார பரவலாக்கல் முறை பலப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த சிபாரிசுகளை



# அரசாங்கத்தினால் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ரத்து செய்ய முடியுமா?

இல்லாததால் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய நிலைமையுமே அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையாகும். இதனால் மாகாண சபைகளையே ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நிலைக்கு சில தலைவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனை நேரடியாகவே கூறியவர் எப்போதும் சுற்றி வளைக்காமல் பேசும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்‘வே. அண்மையில் ஆங்கில பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றின் போது மாகாண சபைகளை தோற்றுவித்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை தாமதமின்றி ரத்துச் செய்ய வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் போருக்கு பின்னாலான அபிவிருத்தியை தடுப்பதாகவும் அவ் அபிவிருத்தியை தொடர்ந்தும் தடுக்க தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இடமளிக்க முடியாது என்றும் கூறிய அவர், பேட்டியின் ஒரு கட்டத்தில் திவி நெகும சட்டமூலத்திற்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்புக்கள் தனித்து கவனத்தில் எடுத்து கொள்ளக்கூடாது என்றும் கூறியிருந்தார். 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக அவர் குரல் எழுப்புவதற்கு திவி நெகும பிரச்சினையே அடிப்படை காரணம் என்பது இதனால் புலனாகிறது.

கோட்டாபய ராஜபக்‘ ஓர் அரசாங்க அதிகாரி. தாம் அரசியல் விடயங்களை பகிரங்கமாக ஆராய்வது முறையல்ல என்ற பிரச்சினை

தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக்க ஹெல உருமய போன்ற கட்சிகளும் தேசபக்த தேசிய அமைப்பு போன்ற அமைப்புக்களும் இப்போது 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று அறிக்கை விட தொடங்கியுள்ளன. 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வீரவன்ச இப்போது கூறி வருகிறார்.

இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவென்றால் இந்திய தலைவர்களின் அழைப்பின் பேரில் இம் மாத ஆரம்பத்தில் இந்தியாவுக்குச் சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் தூதுக் குழு புது டில்லியில் இருக்கும்போதே தான் பாதுகாப்புச் செயலாளர் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக கருத்து வெளியிட்டு இருந்தார்.

இவரது கருத்தை இந்திய தலைவர்கள் எவ்வாறு புரிந்து கொண்டார்களோ தெரியாது. ஏனெனில் இலங்கை தலைவர்கள் இதுவரை இந்திய தலைவர்களோடு கூறியவற்றுக்கு முரணாகவே கோட்டாபய ராஜபக்‘வின் கருத்து அமைந்துள்ளது. இந்திய தலைவர்களும் இலங்கைத் தலைவர்களும் சந்தித்துக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் இனப் பிரச்சினை ஆராயப்பட்டு வருகின்றது. அவ்வப்போதெல்லாம் இலங்கையில் தற்போது அமுலில் உள்ள அதிகார பரவலாக்கல் முறை பலப்படுத்தப்பட வேண்டும் என

ஜனவரி மாதம் 16 முதல் 19ஆம் திகதி வரை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இலங்கை விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருந்தார். அப்போது இலங்கை வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் கலந்து கொண்ட செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றிய இந்திய வெளியுறவு அமைச்சர் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகார பரவலாக்கல் துறையில் முன்னோக்கிச் செல்வதற்கான தமது

**– ஐயூப்**

ஆர்வத்தை இலங்கை அரசாங்கம் பலமுறை இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளதாக கூறியிருந்தார்.

தாம் அன்று காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்ததாகவும் அவரும் இதை வலியுறுத்தியதாகவும் அவர் அந்த செய்தியாளர் 'மாநாட்டின் போது கூறினார். தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்திவுக்கு விஜயம் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அப்போதும் வழமையான வலியுறுத்தல்களையும் உறுதிப்பாடுகளையும் இரு சாராரும் வழங்கினர்.

இதுபோன்று ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. மனித உரிமை பேரவை போன்றவற்றிலும் இலங்கை தலைவர்கள் அதிகார பரவலாக்கல் முறையை பலப்படுத்துவதாக கூறி வந்துள்ளனர். அன்மையில்

அமுலாக்குவதாகவே சர்வதேச சமூகத்திற்கு கூறி வருகிறது.

போர் முடிவடைந்த உடன் 2009ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகம் பான்-கி-மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். 26ஆம் திகதி அவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‘வும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தனர். அதிலும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஓரிரு வாரங்களுக்கு முன்னரும் ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என மீண்டும் கூறியிருந்தார்.

இந்தியா 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தோடு நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளது. இந்தியா 1987ஆம் ஆண்டு தமது விமானப்படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் பலத்தைக் காட்டி ஏற்படுத்திய நெருக்குவாரத்தின் விளைவாகவே ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் தலைமையிலான இலங்கை அரசாங்கம் அன்று 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வர இணங்கியது. சுருக்கமாக இந்தியாவே 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அறிமுகப் படுத்தியது எனலாம்.

இந்தப் பின்னணியில் தான் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிரான குரல் வலுப்பெற்று வருகிறது. எனவே உத்தியோக பூர்வமாக இலங்கை அரசாங்கம் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்ற விடயத்தில் என்ன செய்யும் என்பது பலரது கேள்வியாக இருக்கிறது. ஐ.நா. மனித உரிமை பேரவையில் பல

சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் அரசாங்கம் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ரத்துச்செய்ய முன்வருமா என்பது கேள்விக்குறியே. அதேவேளை அரசாங்கத்தினால் இந்தியாவையும் மறந்துவிட முடியாது.

அவ்வாறாயின் மேற்கூறிய நெருக்குவாரங்களின் காரணமாக அரசாங்கம் அதிகார பரவலாக்கல் முறையை பலப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்குமா என்று ஒருவர் கேள்வி எழுப்பலாம். அதுவும் நடக்காது. முதலாவதாக, அரசாங்கத்தின் தலைவர்கள் இயல்பாகவே அதிகார பரவலாக்கலை விரும்பாதவர்களாவர். உலகுக்குத் தெரியவே அவர்கள் அதைப் பற்றிப் அடிக்கடி குறிப்பிட்டு வருகிறார்கள். மறுபுறத்தில் பெரும்பான்மை சமூகத்திற்குள் இருந்து அதிகார பரவலாக்கல் முறைக்கு எதிராக பலமாக குரல் எழுப்பப்பட்டு வரும் நிலையில் அவர்கள் அதனையே சாதகமான நிலைமையாகவே பாவிப்பார்கள்.

எனவே மொத்தத்தில் தற்போதைய நிலைமை அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் “சும்மா“ இருந்து காலத்தை கடத்த பொருத்தமான நிலைமையாகவே இருக்கிறது. அநேகமாக இந்த விடயத்தில் அரசாங்கம் தற்போதைக்கு எதுவும் செய்யாமல் “சும்மா“ இருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

அதேவேளை 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக அரசாங்கத்திற்குள்ளிருந்தே தற்போது எழுந்துள்ள குரல்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இனப் பிரச்சினை தொடர்பான உத்தேச நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்குள் இழுக்கும் கருவியாகவும் அரசாங்கம் பாவிக்கலாம். அதாவது நீங்கள் வராவிட்டால் ஒன்றுமே இல்லாமல் போகலாம் என்ற செய்தியையும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிரான இந்த கொக்கரிப் புக்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

*(நன்றி இணையம்)*

# மிட் ரோம்னியை மிஞ்சினார் ஜனாதிபதி பராக் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமாவுக்கு 48 சதவிகிதம் வெற்றி வாய்ப்பு உள்ளதாக கருத்து கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் வருகிற நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் பராக் ஒபாமாவும், குடியரசு கட்சி சார்பில் மிட் ரோம்னியும் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒரே மேடையில் விவாதிப்பது கடந்த 1960ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது.

இதன் படி முதல் சுற்று விவாதம் டென்வர் நகரிலும், இரண்டாவது சுற்று விவாதம் நியூயார்க்கிலும், மூன்றாவது சுற்றி விவாதம் புளோரிடாவிலும் நடந்தது.



இந்த விவாதங்களில் ஒரே மேடையில் அமர்ந்து கொண்டு ஒபாமாவும், மிட்ரோம்னியும் விவாதிப்பனர்.

முதல் சுற்று விவாதத்தில் மிட் ரோம்னியும், 2-வது சுற்று விவாவதத்தில் பராக் ஒபாமாவும் வெற்றி பெற்றிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த 3-வது சுற்று விவாதத்தில், ஒருகட்டத்தில் ஒபாமாவின் வெளிவிவகார கொள்கைகளை மிட்ரோம்னி ஏற்றுக் கொண்டார்.

எனவே ஒபாமாவின் வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ளதாக சி.என்.என் கருத்து கணிப்பு தெரிவிக்கிறது.

அடுத்த மாதம் நடக்க உள்ள தேர்தலில் ஒபாமாவுக்கு 48 சதவிகித ஆதரவு உள்ளதாகவும், மிட் ரோம்னிக்கு 40 சதவிகித ஆதரவு உள்ளதாகவும் கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

# நான் நலமாக உள்ளேன்: வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் பிடல் காஸ்ட்ரோ

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ மரணத்தை ஏற்படுத்தும் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

கியூபாவின் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த பிடல் காஸ்ட்ரோவுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதை தொடர்ந்து, அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ ஆட்சி பொறுப்பை ஏற்றார்.

இந்நிலையில் கடந்த வாரம் ஸ்பெயின் பத்திரிக்கையில் பிடல் காஸ்ட்ரோ இறக்கும் தருவாயில் உள்ளார் என செய்தி வெளியானது.



இத்தகவலுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள பிடல் காஸ்ட்ரோ, கியூபாவுக்கு எதிரானவர்கள் இது போன்ற பொய்யான செய்தியை பரப்பி உள்ளனர்.

எனக்கு பக்கவாத நோய் தாக்கியுள்ளது. இருப்பினும் என்னுடைய பணிகளை செய்து கொள்ளும் அளவுக்கு உடல் நலத்துடன் உள்ளேன.

என்னை பற்றி தவறான செய்தியை பரப்பிய கெட்ட சாத்தான் பறவைகளை பற்றி நான் எண்ணி பார்க்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.


# இத்தாலியில் விஞ்ஞானிகளுக்கு சிறைத்தண்டனை: அதிர்ச்சியில் உலக விஞ்ஞானிகள்

நிலநடுக்கம் குறித்து மக்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்காத விஞ்ஞானிகளுக்கு சிறைத்தண்டனை விதித்து நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தாலியின் லாஅகியுலா பகுதியில் கடந்த 2009ஆம் ஆண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கத்தில் 309 பேர் கொல்லப்பட்டனர்.

இதனை முன்கூட்டியே கணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி எதுவும் சொல்லவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் 6 விஞ்ஞானிகள் மற்றும்



அதிகாரி ஒருவருக்கு 6 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

இத்தீர்ப்பு உலகளவில் அறிவியல் நிபுணர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது.

# மருத்துவமனையில் பயங்கர தீ விபத்து: 12 பேர் பலி

தைவானில் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் பலியாயினர், 72 பேர் காயமடைந்தனர்.

தைவான் நகரில் உள்ள மருத்துவமனையில் திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

ஐந்து மாடிகள் கொண்ட இந்த மருத்துவமனையின் இரண்டாவது தளம் முழுவதும் எரிந்து நாசமானது. இந்த விபத்தில் 12 பேர் பலியாயினர், 72 பேர் காயமடைந்தனர்.




காயமடைந்த நபர்கள் இந்நகரில் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குளிர்பதன அறையில் ஏற்பட்ட தீ விபத்தே இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

# உலக பார்வை

## இரவில் பெண்கள் தனியாக நடமாட முடியாது

# பெண்களை குறிவைத்து தாக்குதல் நடத்திய சிறுவன் கைது

கனடாவில் பெண்களை தாக்கி வந்த 15 வயது சிறுவனை பொலிசார் கைது செய்தனர்.

கனடாவின் டொராண்டோ மாகாணத்தில் இரவில் தெருவில் நடமாடும் பெண்களை 15 வயது சிறுவன் தாக்குவதாக குற்றச் சாட்டு எழுந்தது.

இதனையடுத்து அச்சிறுவனை கைது செய்வதற்காக பொலிசார் திட்டமொன்றை வகுத்தனர்.

அதன்படி பெண் பொலிஸ் அதிகாரியொருவர் இரவில் தனியாக நடந்து வந்த போது, சிறுவன் அந்த பெண் பொலிசையும் தாக்க முயன்றுள்ளார்.

இந்நேரத்தில் சிறுவனை பொலிசார் கைது செய்தனர்.

இச்சிறு வன் மீது பெண்கள் மீது தாக் குதல் நடத்தியதாக 14 வழக் குகளும், ஆண்கள் மீது தாக்குதல் நடத்தியதாக 2 வழக்



குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து பொலிஸ் அதிகாரி பில் பிளேர் கூறுகையில், பெண் பொலிஸ் அதிகாரியின் ஒத்துழைப்பு இல்லாமல் இருந்திருந்தால், குற்றவாளியை கைது செய்திருக்க முடியாது.

அவருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம். குற்றவாளி மீது வழக்கு விசாரணை நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.



நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஹெய்தியிலுள்ள கராகல் பகுதியில் தொழில் பூங்காவை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் அந்நாட்டு முன்னாள் அதிபரும் ஹிலாரியின் கணவருமான பில் கிளின்டன்.

# கடாபி மகன் பிறந்தநாள் விழாவில் விபசார பெண்கள்: விசாரணை தொடங்கியது

லிபியா முன்னாள் ஜனாதிபதி மும்மர் கடாபியின் மகன் முத்தாஸீம் கடாபியின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக அழைத்து வரப்பட்ட விபசார குழு மீதான விசாரணை தொடங்கியது.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் முத்தாஸீம் கடாபி ஆவார். இவரது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக 5 விபசார பெண்கள் மற்றும் 2 பாதுகாவலர்கள் என ஐந்து பேர் மீது விசாரணை தொடங்கியது.

மேலும் இவர்களுடன் தொடர்புடைய வேறு ஐந்து பேர் மீதும் விசாரணை ஆரம்பமானது. இந்த குழுவில் விளம்பர நடிகைகளும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களில் ஏலி நகாஸ் என்ற பெண் விளம்பர நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் ஆவார். இவர் கடந்த 2004ஆம் ஆண்டு முத்தாஸீம் கடாபியின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்தார். இந்த விழாவிற்கு மொத்தம் 20 விளம்பர அழகிகளை வரவழைத்ததில், 1.5



மில்லியன் டொலர் செலவானது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் கேன்ஸ் பட விழாவில் பாலியல் தொழில்கள் நடப்பது உறுதி செய்யப்பட்டு விட்டது. இந்த விழாவிற்கு வரும் இளம்பெண்களுக்கு மத்திய கிழக்கு நாடுகள், சவுதி அரேபியா, குவைத் நாடுகளிலிருந்து வரும் ஆண்கள் ஆயிரக்கணக்கான டொலர் பணத்தை வழங்குகின்றனர்.

# பிறந்த குழந்தையுடன் ரிக்ஷா ஓட்டிய தந்தை: அரசு உதவி



தாய் இறந்ததால் தனது பச்சிளங்குழந்தையை தோளில் சுமந்தபடி ரிக்ஷா ஓட்டி பிழைப்பு நடத்தி வந்த தந்தைக்கு ராஜஸ்தான் அரசு உதவி செய்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் ரிக்'ஷாகாரர் ஜாதவ் என்பவர் தனது கழுத்தில் துணியொன்றில் தனது ஒருமாதக் குழந்தையை தொங்க விட்டு, அணைத்துப் பிடித்தபடி ரிக்ஷா வண்டியை ஓட்டிச்சென்றார்.

அந்த ரிக்ஷா தொழிலாளி பற்றியான விசாரணையில், அவரது மனைவி சாந்தி கடந்த செப்ரெம்பர் 20ஆம் திகதி குழநதையொன்றை பெற்றெடுத்த நிலையில் உயிரிழந்துவிட்டார்.

தாய் உயிரிழந்ததையடுத்து குழந்தையை பார்த்துக்கொள்ள வீட்டில் யாரும் இல்லாதபடியால், அந்தக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு ஜாதவ் தினசரி தொழிலுக்கு புறப்பட்டு விடுவார்.

தினசரி நடக்கும் இந்நிகழ்வைப் பார்த்தவர்கள் மாவட்ட கலெக்டருக்கு தெரிவித்தனர்.

இதையடுத்து கலெக்டர் பிரகாஷ் சுக்லா, அந்த குழந்தையை மீட்டு அரசு மருத்துவமனையில் பராமரிக்க உத்தரவிட்டார். இதன்படி குழந்தை ஜெய்ப்பூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.

குழந்தையின் நலம் குறித்து டொக்டர்கள் கூறுகையில், குழந்தை முறையாக பராமரிக்காததால் மிக பலவீனமாக இருக்கிறது. உடலுறுப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது வென்டிலேட்டரில் வைத்துள்ளோம். தொடர்ந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் நல்ல நிலைக்கு கொண்டு வர முடியும் என்றனர்.

தன் நிலையைப்பற்றி ரிக்ஷா தொழிலாளி ஜாதவ், தாயை இழந்த குழந்தையை பராமரிக்க ஆள் இல்லாததால் நானே புட்டிப் பாலுடன் ரிக்சா ஓட்ட புறப்பட்டு விடுவேன்.

கழுத்தில் தொங்க விட்டபடி செல்லும் போது குழந்தை சிறுநீர், மற்றும் மலம் போய் விடும். ரோட்டில் தண்ணீர் இருக்கும் இடத்தில் கழுவி விடுவேன்.

பால் கொடுப்பதும், கவனித்து கொள்வதும் மிக சிரமமாக இருந்தாலும், எனது புள்ளைக்கு யார் செய்வார் என்று கண்ணீருடன் கலங்கினார் ரிக்சா தொழிலாளி ஜாதவ்.

தற்போது இந்த குழந்தையின் முழுச்செலவையும் ஏற்றுள்ள அரசுக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# கசாப்பின் கருணை மனு நிராகரிப்பு



26.11 மும்பைத் தாக்குதலில் ஈடுபட்ட அஜ்மல் கசாபின் கருணை மனுவை உள்துறை அமைச்சகம் நிராகரித்துள்ளது.

மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி லஷ்கர்- இ- தொய்பா பயங்கரவாதிகள் 10 பேர் தாக்குதல் நடத்தினர். இந்தப் படு பயங்கரத் தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.

அதேநேரத்தில் பொலிசார் நடத்திய பதில் தாக்குதலில் பயங்கரவாதிகள் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற பயங்கரவாதி மட்டும் சிக்கினான்.

அவன் மீதான விசாரணை மும்பை ஆர்தர் ரோடு சிறையில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. அதில் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பின் இந்தத் தண்டனையை மும்பை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது. இதையடுத்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அவனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்தது.

இந்நிலையில் தனக்கு கருணை காட்டக் கோரி ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பினான். இந்த மனு கடந்த செப்டம்பர் மாதம் மகாராஷ்டிர உள்துறை அமைச்சகத்தால் நிராகரிக்கப்பட்டது.

பின்னர் இந்த மனு முதல்வர் அலுவலகம் மூலமாக மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது. தற்போது கசாப்பின் கருணை மனுவை மத்திய உள்துறை அமைச்சகம் நிராகரித்துள்ளது. மேலும் ஜனாதிபதியும் கசாப்பின் மனுவை நிரா-கரிக்கும்படி பரிந்துரை செய்துள்ளது.

# சின்மயி கொடுத்த ஆபாச புகார்: மேலும் ஒருவர் கைது



டுவிட்டரில் பாடகி சின்மயி குறித்து ஆபாசமாக விமர்சித்ததாக மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில், தன்னை பற்றி டுவிட்டர் என்ற சமுதாய இணையதளத்தில் ஆபாசமாக எழுதப்பட்டிருப்பதாகவும், அதனை எழுதிய 6 பேர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சின்மயி புகார் கொடுத்திருந்தார்.

இந்த புகார் குறித்து விசாரணை நடத்திய சைபர் கிரைம் பொலிஸார், தரமணியில் உள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் பேஸன் டெக்னாலஜி பயிலகத்தின் உதவி பேராசிரியர் சரவணகுமார் என்பவரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இதையடுத்து, நேற்று திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் ராஜன் என்பவரை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் தலைமறைவாக உள்ள 4 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# கூடங்குளம் அணு உலை ஒப்பந்தம்: புட்டின் வருகை இரத்து

கூடங்குளம் அணு உலை ஒப்பந்தம் தொடர்பாக இந்தியா வரவிருந்த ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புடினின் வருகை திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கூடங்குளத்தில் 2 மற்றும் 3வது அணு உலைகளுக்கான பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட புடின் இந்தியா வருவதாக இருந்தது.

ஏற்கனவே, முதல் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் இழப்பீடு இந்தியாதான் வழங்க வேண்டும் என்று ஒப்பந்தமாகியுள்ளது.

இந்நிலையில் 2 மற்றும் 3 வது அணு உலையில் விபத்து ஏற்பட்டால் இந்த இழப்பீட்டையும் இந்தியாதான் வழங்க வேண்டும் என்று கூறி, ரஷ்யா பொறுப்பை ஏற்க மறுக்கிறது.

இந்தியாவோ அணுமின் நிலையம் அமைக்க உதவும் ரஷ்யாவே இழப்பீட்டையும் வழங்க வேண்டும் என்று கூற, ஒப்பந்தத்தில் ஒரு முடிவு எட்டப்படாததால் புடின் வருகை இரத்தாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அணுமின் நிலையம் தொடர்பாக 2008இல் உருவான ஒப்பந்தம் செல்லாது என்றும் 2010ஆம் ஆண்டு சட்ட திருத்தப்படி புதிதாக ஒப்பந்தம் போடவேண்டும் எனவும் மத்திய அரசு கூறிவருவதால் அணு உலை ஒப்பந்தத்தில் இழுபறி நீடிக்கிறது.

இதனால் ரஷ்ய ஜனாதிபதி புடினின் வருகை இப்போது ரத்தாகி, வரும் நவம்பரில் அவர் இந்தியா வருவார் என தெரிகிறது.

## இந்திய செய்திகள்

# கால்பந்து ஜாம்பவான் மரடோனா இந்தியா வருகை



கேரளாவில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்காக அர்ஜென்டினா முன்னாள் கால்பந்து ஜாம்பவான் மாரடோனா (வயது 53), நேற்று இந்தியா வந்தார்.

இரு நாள் பயணமாக இன்று கேரளா வந்த மாரடோனா, தனியார் நிறுவனத்தின் சார்பில் நடக்க உள்ள நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இந்நிறுவனத்தின் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ள மாரடோனா, இதற்காக கேரளாவின் கொச்சியில் உள்ள நெடுப்பஞ்சேரி சர்வதேச விமான நிலையம் வந்திறங்கினார்.

பின்னர் தனி ஹெலிகப்டர் மூலம் கண்ணூர் சென்ற அவர? ஆயிரக்கணக்கான இரசிகர்கள் திரண்டு வரவேற்றனர்.

இந்தியாவிற்கு இவர் வந்துள்ளது இரண்டாவது முறையாகும். கடந்த 2008ஆம் ஆண்டு முதல் முறையாக கொல்கத்தா வந்த மாரடோனா, பல்வேறு நிகழ்ச்சிக-ளில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



குஜராத் தலைநகர் காந்திநகரில் நடைபெற்ற நவராத்திரி கொண்டாட்டத்தில் உற்சாகமாக நடனமாடிய பெண்கள்.

# மூன்று மாத சம்பளத்தை ஏற்க கிங்பிஷர் ஊழியர்கள் மறுப்பு



மூன்று மாத சம்பள பாக்கியை வழங்க முன்வந்த கிங்பிஷர் ஏர்லைன்ஸ் நிறுவனம் வைத்த கோரிக்கையை, போரட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் ஏற்க மறுத்தனர்.

கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள கிங்பிஷர் ஏர்லைன்ஸ் நிறுவனம் தன் ஊழியர்களுக்கு, ஏழு மாதமாக சம்பளம் வழங்கவில்லை. இதனால், ஊழியர்கள் போராட்டத்தில் குதித்தனர். இதையடுத்து கிங்ஷர் விமான சேவை முடங்கியுள்ளது. 23 நாள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர கடைசி கட்ட பேச்சுவார்த்தை மும்பையில் நடந்தது.

இதில், மூன்று மாத சம்பளத்தை மூன்று தவணையாக, தீபாவளிக்கு முன் வழங்கிவிடுவதாக கிங்பிஷர் நிர்வாகம் உறுதியளித்தது. இது குறித்து ஊழியர்கள் ஆலோசித்து முடிவு செய்ய அவகாசம் அளிக்கபட்டது. 25ஆம் தேதிக்குள் ஊழியர்கள் பணிக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. நிர்வாகம் வைத்த கருத்தை, மும்பையைச் சேர்ந்த ஊழியர்கள் ஏற்க முன்வந்ததாக கூறப்படுகிறது. ஆனால், டில்லியை சேர்ந்த ஊழியர்கள் சிலர் நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்க முடியாது என அறிவித்துள்ளனர். நான்கு மாத சம்பளத்தை உடனடியாக சில நாட்களில் வழங்க வேண்டும் என்பது அவர்கள் கோரிக்கை. ஊழியர்கள் இடையே மாறுபட்ட கருத்து நிலவுவதால், நாளைக்குள் பணிக்குத் திரும்புவார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

# டெல்லி, ரைற்றன்ஸ் போட்டி கைவிடப்பட்டது

சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரின் இரண்டாவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது. டெல்லி டெயாடெவில்ஸ் மற்றும் ரைற் றன்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியை கைவிடப்பட்டிருந்தது.

சுப்பர்ஸ்போர்ட் பார்க் மைதானத்தில் இடம்பெறவிருந்த இப்போட்டியின் நாணயச்சுழற்சி இடம்பெற்று ரைற்றன்ஸ் அணி வெற்றி பெற்று முதலில் களத் தடுப்பில் ஈடுபட முடிவுசெய்தி ருந்தது.

எனினும் தொடர்ச்சியான மழை காரணமாக போட்டி ஆரம்பிக்கப் படாமலேயே கைவிடப்பட்டுள் ளது. இதன் காரணமாக இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளி கள் வழங்கப்பட்டன.

இந்த இரு அணிகளும் ஏற்கனவே . அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றிருந்த போதிலும், நேற்று இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டதால் ரைற்றன்ஸ் அணி குழு “ஏ” இல் முதலிடத்தைப் பெறும் வாய்ப்பை இழந்தது.



நேற்றைய போட்டியில் வெற்றி பெற்றிருந்தால் ரைற்றன்ஸ் அணி குழு “ஏ” இல் முதலிடத்தைப் பெற்றிருக்க முடியும்.

இதனடிப்படையில் குழு “ஏ” இல் டெல்லி டெயாடெவில்ஸ் அணி முதலிடத்தையும், ரைற்றன்ஸ் அணி இரண்டாமிடத்தையும் பெற்று அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றுள்ளன.

குழு “பீ” இல் சிட்னி சிக்ஸர்ஸ் அணி முதலிடத்தையும், லயன்ஸ் அணி முதலிடத்தையும் பெற்று அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றுள்ளன. அரையிறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

## வீரர்களின் ஒழுக்கவியல் பிரச்சினைகள் அணியைப் பாதித்தன: மார்க்கஸ் நோர்த்

பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணியின் வீரர்களில் ஒழுக்கவியல் பிரச்சினைகள் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணியை சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரில் பாதித்திருந்ததாக அவ்வணியின் தலைவர் மார்க்கஸ் நோர்த் தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்த வீரர்களின் பெயர்களை வெளியிட விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி தங்களது முதலாவது போட்டியில் ரைற்றன்ஸ் அணியுடன் தோல்வியடைந்ததோடு, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடனான போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்று காணப்பட்ட டெல்லி டெயாடெவில்ஸ் அணிக்கெதிரான போட்டிக்கு முன்னதான தயார்படுத்தல்களில் குழப்பங்கள் ஏற்பட்டதாக மார்க்கஸ் நோர்த் தெரிவித்தார்.

தயார்படுத்தல்கள் இடம்பெறும் போது வீரர்கள் சிலரால் அவை ஒழுங்காக இடம்பெறாது காணப்பட்டதாகவும், அதன் காரணமாக அணி முழுமையான தயார்படுத்தலில் ஈடுபட்டுத் தயார் நிலையில் காணப்பட்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய போட்டியில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக மிற்சல் மார்ஷ், ஷோன் மார்ஷ், நேதன் றிமிங்டன் ஆகியோர் நீக்கப்பட்டுப் புதிய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அந்த 3 வீரர்களுமே ஒழுக்கவியல் பிரச்சினைகளில் ஈடுபட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் மார்க்கஸ் நோர்த் வேறுவிதமான கருத்துக்களை வெளியிட்டார்.

போட்டியில் பங்குபற்றிய வீரர்களும், பங்குபற்றாத வீரர்களும் அந்த ஒழுக்கவியல் பிரச்சினைகளில் ஈடுபட்டதாகவும், அந்த வீரர்களைப் பெயரிட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## கிண்ணத்தை வெல்லும் தகுதி சென்னைக்குக் காணப்பட்டது: சுரேஷ் ரெய்னா



இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரினை வெற்றிகொள்ளும் தகுதி சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்குக் காணப்பட்டதாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சுரேஷ் ரேய்னா தெரிவித்துள்ளார். சில தவறுகள் காரணமாக அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற முடிந்திருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.


அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்புக்களை ஏற்கனவே இழந்துவிட்ட நிலையில் நேற்றைய போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வழமையான தலைவர் மகேந்திரசிங் டோணிக்குப் பதிலாக சுரேஷ் ரெய்னா தலைமை தாங்கினார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சுரேஷ் ரெய்னா, அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெறாமை வருத்தம் தருவதாகத் தெரிவித்தார். சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரைத் தாங்கள் வென்றிருக்க முடியும் எனத் தான் இன்னமும் எண்ணுவதாகத் தெரிவித்த சுரே' ரெய்னா, இத்தொடரில் தாங்கள் சில தவறுகளை விட்டதாகவும், அவை தங்களைப் பாதித்ததாகவும் தெரிவித்தார்.

மகேந்திரசிங் டோணி - சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாகப் பங்குபற்றிய போதிலும், அணித்தலைவராக சுரேஷ் ரெய்னா செயற்பட்டமை குறித்துக் கருத்துத் தெரிவித்த ரெய்னா, அணித் தலைமையை மகிழ்வாகக் கருதிச் செயற்படுமாறு மகேந்திரசிங் டோணி தனக்கு அறிவுரை வழங்கியதாகத் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலிரண்டு போட்டிகளில் தோல்வியடைந்ததோடு, அடுத்த இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## ஒக்லான்ட் அணியை வென்றது பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி



சம்பியன்ஸ் லீக் டுவெண்டி டுவெண்டி தொடரில் நேற்றைய முதலாவது போட்டியில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. ஒக்லான்ட் அணிக்கும், பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சுப்பர்ஸ்போர்ட் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது விக்கெட்டாக ஹேர்ஷல் கிப்ஸை இரண்டாவது ஓவரிலேயே இழந்த அவ்வணி, 2ஆவது விக்கெட்டுக்காக 55 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது. தொடர்ச்சியாகக் களமிறங்கிய வீரர்களும் கணிசமான ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக போல் கொலிங்வூட் 27 பந்துகளில் 38 ஓட்டங்களையும், மார்க்கஸ் நோர்த் 35 பந்துகளில் 37 ஓட்டங்களையும், ரொம் பீற்றன் 19 பந்துகளில் 22 ஓட்டங்களையும், சைமன் கற்றிச் 23 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஒக்லான்ட் அணி சார்பாக மைக்கல் பேட்ஸ் 4 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ரொனி ஹீரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

141 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஒக்லான்ட் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

மெதுவான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட ஒக்லான்ட் அணி முதலாவது விக்கெட்டை 13 ஓட்டங்களுக்கு இழக்கும் போது 3.5 ஓவர்கள் கடந்திருந்தன. அதன் பின்னர் இரண்டாவது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அதன் பின்னர் அவ்வணியால் ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் ஒக்லான்ட் அணி சார்பாக மார்ட்டின் க[illegible] 32 பந்துகளில் 36 ஓட்டங்க[illegible]யும், கொலின் முன்ரோ 18 பந்துகளில் 23 ஓட்டங்களையும், அஷார் மஹமூட் 21 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக மைக்கல் பியர் 4 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜோ மென்னி 4 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நயன் டபீல்ட், பிரட் ஹொக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணியின் மைக்கல் பியர் தெரிவானார்.

## 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கும் இடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் வடக்கின் மாபெரும் போர், பொன் அணிகள் போர் போன்ற கிரிக்கெட் போட்டிகளைப் போல இந்தப் போட்டியும் அமையவுள்ளது.

இந்தப் போட்டியானது 28 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 29 ஆம் திகதி போட்டி நெற்கொழு பொது விளையாட்ட ரங்கிலும் நடைபெறவுள்ளது.

## விபுலானந்த ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டப் போட்டி

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வருடாந்தோறும் நடத்தி வரும் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன.

இம்முறை நடைபெறும் இச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, சென்.ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன.

பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, வேம்படி உயர்தரப் பாடசாலை ஆகிய அணிகள் இம்முறை பங்குபற்றுகின்றன. இறுதியாக கடந்தவருடம் நடைபெற்ற போட்டியில்

கடந்த வருட போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியமை குறிப்பிடத் தக்கது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 25.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது